# இலை மரக்கறிகள்











விவசாயத் திணைக்களத்தின் பிரசுரம்

# இலை மரக்கறிகள்

விவசாயத் திணைக்களம்
பேராதனை
1999

# இலை மரக்கறிகள்


தொகுப்பாசிரியர்கள்
கே.பீ.வகுந்தெனிய
ஆராய்ச்சி அலுவலர்
பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம்
கண்ணோறுவை, பேராதனை
என்.குறுகுல ஆராய்ச்சி
பிரதி விவசாயப் பணிப்பாளர்
மத்திய மாகாண விவசாயத் திணைக்களம்


## விடய ஆலோசனைக் குழு

| | |
|---|---|
| வைத்திய கலாநிதி உபாலி பிலபிட்டிய | பியசீலி வேரகொட |
| என்.பீ.சி. த சில்வா | கமல் கருணாகொட |
| வீ.சண்முகநாதன் | வை.எம்.எஸ்.பீ.உடவெல |
| ஏ.ஜி.அபேசிங்க பண்டா | யூ.என்.ஜே.எகொடவத்த |
| இத்திராணி வகுந்தெனிய | எஸ்.மரைக்கார் |
| கலாநிதி ஐ.ஜே.த சொய்சா | பீ.கே.கே.ஆர்.பெரேரா |
| கே.கே.பெரேரா | யூ.லக்ஸ்மன் |
| ஜீ.பீ.எச்.சந்திரலதா | எஸ்.பீ.எட்டாம்பாவெல |
| எம்.ஏ.விமலவீர | கே.எச்.யு.குமாரசிங்க |
| எஸ்.பெரியசாமி | கே.என்.மான்கோட்டே |
| கே.சப்புமொஹொட்டி | ரீ.கமகே |
| எல்.எம்.சோமவர்த்தன | ஏ.நாணயக்கார |


ஆக்கம்
ராஜகருணா தொலுவீர

தமிழில்
சீரங்கன் பெரியசாமி

புகைப்படங்கள்
கே.பி.வகுந்தெனிய

கணணி வடிவமைப்பு
யோ.கு.கிருபைநாதன்

வெளியீடு
பணிப்பாளர்
விரிவாக்க, செய்தித் தொடர்பு நிலையம்
விவசாயத் திணைக்களம், பேராதனை

விவசாய, காணி அமைச்சு
விவசாயத் திணைக்களத்தின் பிரசுரம்
1998

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அறிமுகம் | ..... | 01 |
| பொன்னாங்காணி | ..... | 05 |
| வல்லாரை | ..... | 12 |
| சாறணை | ..... | 17 |
| கொஹில | ..... | 18 |
| கங்குன் | ..... | 20 |
| பசளி | ..... | 21 |
| அகத்தி | ..... | 23 |
| ஆயுர்வேத இயல்புகள் | ..... | 25 |

# அறிமுகம்

எமது நாளாந்த உணவில் மரக்கறிகள் முக்கியமானவையாகும். இவற்றினால் உணவு சுவையடைகின்றது. இவை ஆரோக்கியமான வாழ்விற்கு உடலிற்கு அவசியமான பல போசணைப் பதார்த்தங்களையும் வழங்குகின்றன.

தாவரங்களின் இலைகள், இளம் தண்டுகள் என்பனவே இலை மரக்கறிகள் அல்லது எனப்படுகின்றன.

கிச்சடி, வறை, கஞ்சி, குடிநீர் வகைகள், கறி, பால் சொதி என்பனவற்றைத் தயாரிக்க கீரைகள் உதவுகின்றன. இவை மிகவும் பிரசித்தி பெற்ற உணவுகளாகும். இலங்கையில் அநேகமானோர் தமது விட்டமின், கனிப்பொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் இலை மரக்கறிகளையே உண்ணுகின்றனர். இவற்றில் விற்றமின் ஏ, சி, கே, இரும்பு, கல்சியம், பொசுபரசு, மக்னீசியம், மங்கனீசு என்பன அடங்கியுள்ளன. கீரைகளிலுள்ள போசணைப் பதார்த்தங்களின் விபரங்கள் அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளன.

எமது உணவுக் கால்வாய்த் தொகுதி சீராகத் தொழிற்பட நார்ப்பொருள் அவசியமாகும். இலை மரக்கறிகளில் நார்ப்பொருட்கள் அடங்கியுள்ளன.

இவற்றைத் தவிர அனைத்துக் இலை மரக்கறிகளும், மருத்துவக் குணங்களையும் கொண்டுள்ளதாக ஆயுர்வேத வைத்தியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றின் முக்கியத்துவத்தின் பயனாகச் சந்தையில் இவற்றிற்குச் சிறந்த கிராக்கி நிலவுகின்றது. இதனால் இலை மரக்கறிகளின் உற்பத்தியும், விற்பனையும் அதிக இலாபம் தரும் தொழில் முயற்சியாக உள்ளது. ஏக்கரொன்றில் இவற்றைச் செய்கைபண்ணுவதன் மூலம் குறைந்தது ஒரு இலட்சம் ரூபா வரை நிகர இலாபமாகப் பெற முடியும் (அட்டவணை 2).

சில இலை மரக்கறிகளுக்கு வெளிநாடுகளில் சிறந்த கிராக்கி நிலவுகின்றது. எனவே, இவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியையும் பெறலாம். சில இலைகளை உலர்த்தி அவற்றைப் பானமாகவும் அருந்த முடியும் (உதாரணம்-வல்லாரை).

இலங்கையில் இலை மரக்கறியாகப் பல வகையான தாவரங்கள் உண்ணப்படுகின்றன. இவற்றைப் பின்வருமாறு மூன்று எளிய பிரிவுகளாகப் பிரிக்க முடியும்.

1. வர்த்தக நோக்கில் பயிரிடப்படும் தாவரங்கள்
2. இயற்கையாக வளரும் தாவரங்கள்
3. இலைகள் கீரையாகப் பயன்படும் வேறுபயிர்கள்

மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவுகளில் பிரபல்யமான சில கீரை வகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| வர்த்தக நோக்கில் பயிரிடப்படும் தாவரங்கள் | இயற்கையாகப் பரவிக் காணப்படும் தாவரங்கள் | இலைகள் கீரையாகப் பயன்படும் வேறு பயிர்கள் |
|---|---|---|
| பொன்னாங்காணி | முடக்கொத்தான் | வற்றாளை, பயற்றை |
| வல்லாரை | மணித் தக்காளி | சிறகவரை, மரவள்ளி |
| கங்குன் | பொன்னாவரசு | கொடித்தோடை |
| சாரணை | குறிஞ்சா | பூசணி |
| அகத்தி | வீட்டில, குப்பைமேனி | கரற், பீற் |
| முளைக்கீரை | பருப்புக்கீரை | முள்ளங்கி, முருங்கை |
| கொஹில | புளிச்சக் கீரை | |
| பசளி | முட்கிளுவை | |

**அட்டவணை 1: 100 கிராம் உண்ணக்கூடிய இலை மரக்கறியில் அடங்கியுள்ள போசணைப் பொருட்களின் அளவு**

| கீரை வகை | ஈரப்பதன் (கிராம்) | சக்தி (கி.கலோரி) | புரதம் (கிராம்) | கொழுப்பு (கிராம்) | மாப்பொருள் (கிராம்) | கல்சியம் (மி.கிராம்) | பொசுபரசு (மி.கிராம்) | இரும்பு (மி.கிராம்) | கரோத்தின் (மை.கி) | தயமின் (மை.கி) | றைபோபிளேவின் (மைக்றோ கிராம்) | நயாசின் (மி.கி) | விற்றமின் C (மி.கி) | நார்ப்பொருள் (க) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொன்னாங்காணி | 77.4 | 73 | 5.0 | 0.7 | 11.6 | 510 | 60 | 16.7 | 1620 | 0 | 140 | 1.2 | 17 | - |
| வல்லாரை | 84.5 | 37 | 2.1 | 0.5 | 6.0 | 224 | 32 | 68.8 | – | – | – | – | 6.8 | 2.0 |
| கங்குன் | 90.3 | 28 | 2.9 | 0.4 | 3.1 | 110 | 46 | 3.9 | 1980 | 50 | 130 | 0.5 | 137 | 1.1 |
| சாரணை | 91.3 | 24 | 2.6 | 0.4 | 3.2 | 100 | 30 | 38.5 | – | – | – | – | 70 | - |
| அகத்தி | 73.4 | 93 | 8.4 | 1.4 | 11.8 | 1130 | 80 | 3.9 | 5400 | 210 | 90 | 1.2 | 169 | 2.2 |
| முள்முளைக்கீரை | 85.0 | 43 | 3.0 | 0.2 | 7.0 | 800 | 50 | 22.9 | 3564 | 0 | – | – | 33 | 1.0 |
| முளைக்கீரை | 85.7 | 45 | 4.0 | 0.5 | 6.1 | 397 | 83 | 25.5 | 5520 | 30 | 300 | 1.2 | 99 | 1.0 |
| பசளி | 92.1 | 26 | 2.0 | 0.7 | 2.9 | 73 | 21 | 10.9 | 5580 | 30 | 260 | 0.5 | 28 | 0.6 |
| கறிவேப்பிலை | 63.8 | 108 | 6.1 | 1.0 | 18.7 | 830 | 57 | 7.0 | 7560 | 80 | 210 | 2.3 | 4 | – |
| முருங்கையிலை | 75.9 | 92 | 6.7 | 1.7 | 12.5 | 440 | 70 | 7.0 | 6780 | 60 | 50 | 0.8 | 220 | – |
| கத்தரி | – | 58 | 4.8 | – | – | 50 | – | 2.7 | 6200 | – | – | – | 85 | – |
| மரவள்ளி இலை | 91.0 | 28 | 2.0 | 0.3 | 4.0 | 80 | – | 2.5 | 300 | 80 | 200 | 0.5 | 50 | 2.1 |

**அட்டவணை 2: ஒரு ஏக்கர் (4000 சதுர மீற்றர்) செய்கைக்கான வரவு, செலவு**

| உள்ளீடு | பொன்னாங்காணி | வல்லாரை | கங்குன் | பசளி |
|---|---|---|---|---|
| நடுகைப்பொருட்கள் | 1500.00 | 1650.00 | 1200.00 | 900.00 |
| பசளை | 16500.00 | 19800.00 | 14500.00 | 12900.00 |
| இரசாயனப்பொருட்கள் | 10200.00 | 12200.00 | 9400.00 | 6200.00 |
| வேறு செலவு | 7500.00 | 9000.00 | 6500.00 | 4200.00 |
| தொழிலாளர் வேதனம் | 29100.00 | 26900.00 | 25100.00 | 12100.00 |
| மொத்தச் செலவு | 64800.00 | 69570.00 | 56700.00 | 36300.00 |
| மொத்த வருமானம் | 216000.00 | 226800.00 | 180000.00 | 144000.00 |
| நிகர இலாபம் | 151200.00 | 157230.00 | 123330.00 | 107700.00 |

## அட்டவணை 3: இலை மரக்கறிகளை வகைகளைச் சமைக்கும் முறைகள்

| கீரை வகை | வறை | கிச்சடி | அவித்துக் குடித்தல் | கறி | பால் சொதி | பொரித்தல் | கஞ்சி | கலந்து பயன்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| புளியாரை | – | ✓ | – | ✓ | – | ✓ | – | – |
| அத்திக்கீரை | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| மலைக்கள்ளி | – | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| கடுகு இலை | – | ✓ | – | – | – | – | – | – |
| திருக்கொன்றல் | – | – | – | – | – | – | – | ✓ |
| நன்னாரி | – | – | – | – | – | – | ✓ | – |
| வட்டுக்கத்தரி இலை | – | – | ✓ | – | – | – | ✓ | – |
| முருங்கையிலை | ✓ | – | – | – | – | – | – | ✓ |
| கங்குன் | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| அகத்தி | ✓ | ✓ | – | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| கொகில | ✓ | – | – | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| கிளாத்தி | ✓ | – | – | ✓ | ✓ | ✓ | – | ✓ |
| முட்கீரை | ✓ | – | – | ✓ | ✓ | ✓ | – | ✓ |
| குறிஞ்சா | – | ✓ | – | ✓ | – | ✓ | – | ✓ |
| சேம்பு | ✓ | ✓ | – | ✓ | ✓ | ✓ | – | ✓ |
| வீட்டிலை | ✓ | ✓ | – | – | – | – | ✓ | ✓ |
| காரை | ✓ | ✓ | – | ✓ | – | ✓ | – | ✓ |
| கோப்பை இலை | ✓ | – | – | – | – | – | – | ✓ |
| மணித் தக்காளி | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| குப்பைமேனி | ✓ | – | – | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| கரட் இலை | ✓ | ✓ | – | – | – | – | – | ✓ |
| வெங்காயத்தாள் | ✓ | ✓ | – | – | – | – | – | – |
| கறிவேப்பிலை | ✓ | ✓ | ✓ | – | ✓ | ✓ | ✓ | ✓ |
| கற்றாளை | – | – | – | ✓ | – | – | ✓ | – |
| கொவ்வையிலை | – | ✓ | – | – | – | – | – | – |
| கொச்சியிலை | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| மரமுந்திரிகைத்துளிர் | – | – | – | ✓ | – | – | – | – |
| வல்லாரை | ✓ | ✓ | ✓ | ✓ | – | – | ✓ | ✓ |
| சீண்டுக்கொடி | ✓ | – | – | – | – | – | – | ✓ |
| ஜப்பான் கத்தரி | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| கயர் குறிஞ்சா | ✓ | ✓ | – | – | – | – | – | ✓ |
| கோசடம் | ✓ | ✓ | – | ✓ | – | ✓ | – | ✓ |
| தும்பை | ✓ | – | – | ✓ | – | – | – | ✓ |
| ஈரப்பலா இலை | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| சிறகவரை இலை | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| விளா இலை | – | – | – | – | – | – | ✓ | – |
| நீர்முள்ளி | ✓ | – | ✓ | ✓ | ✓ | ✓ | – | ✓ |
| பசளி | – | – | – | ✓ | ✓ | ✓ | – | ✓ |
| தாமரைக்கிழங்கு | ✓ | – | – | ✓ | – | ✓ | – | – |
| நீரா வீக்ஸ் | ✓ | ✓ | – | ✓ | – | ✓ | – | – |
| முடக்கொத்தான் | ✓ | ✓ | – | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| பேயவரை | ✓ | – | – | – | – | ✓ | – | ✓ |
| வட்டத்தகரை | ✓ | – | – | ✓ | – | | – | ✓ |
| தேங்காய்ப்பூக் கீரை | ✓ | – | ✓ | ✓ | – | | | ✓ |
| கொடித்தோடைத்துளிர் | ✓ | ✓ | – | ✓ | ✓ | | | ✓ |
| இலைக்கள்ளி | – | | – | ✓ | | | | |

அட்டவணை 3: இலை மரக்கறிகளைச் சமைக்கும் முறைகள் (தொடர்ச்சி)

| கீரை வகை | வறை | கிச்சடி | அவித்துக் குடித்தல் | கறி | பால் சொதி | பொரித்தல் | கஞ்சி | கலந்து பயன்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வற்றாளையிலை | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| பதுளை இலை | ✓ | – | – | – | – | – | – | ✓ |
| பொன்னாங்காணி | ✓ | ✓ | – | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| பெ.பொன்னாங்காணி | ✓ | ✓ | – | ✓ | ✓ | ✓ | – | ✓ |
| முருங்கையிலை | ✓ | ✓ | – | ✓ | ✓ | ✓ | – | ✓ |
| மரவள்ளித்துளிர் | ✓ | – | – | – | – | ✓ | – | ✓ |
| பயற்றையிலை | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| மிஞ்சி இலை | – | ✓ | – | – | – | – | – | – |
| மிளகாய்த் துளிர் | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| சீதேவியார் செங்கழுனீர் | ✓ | – | – | ✓ | – | ✓ | – | ✓ |
| பொன்னாவரசு | ✓ | – | ✓ | – | – | – | ✓ | ✓ |
| முள்ளங்கி | – | – | – | ✓ | – | ✓ | – | – |
| சிவப்பு பிலிங் | – | – | – | ✓ | – | ✓ | – | – |
| நீர்ப் பிரமி | ✓ | – | ✓ | ✓ | – | – | – | ✓ |
| கொடிக்கொசில | ✓ | ✓ | – | ✓ | ✓ | ✓ | – | ✓ |
| பூசணித் துளிர் | ✓ | ✓ | – | ✓ | ✓ | ✓ | – | ✓ |
| இலட்சக்கட்டை | ✓ | – | ✓ | ✓ | – | – | – | ✓ |
| கண்டங்கத்தரி | – | – | – | – | – | – | – | ✓ |
| சாறணை | – | ✓ | – | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| புளித்துளிர் | – | – | – | ✓ | ✓ | – | – | ✓ |
| சாத்தாவாரி | – | – | ✓ | – | – | – | ✓ | – |

கீரையாக உண்ணப்படும் இயற்கையாகப் பரவிக் காணப்படும் தாவரங்கள் சூழல், காலநிலை மாற்றங்களினாலும், நிலத்தைப் பயன் படுத்தும் முறைகளில் ஏற்படும் மாற்றங்களினாலும், நாளாந்தம் அருகிச் செல்லுகின்றன. இன்று இவை கிராமப் புறங்களில் மாத்திரமே காணப்படுகின்றன. நகர்ப்புறங்களில் வசிப் போரில் அநேகமானோர் இவற்றை அறிந்திருப்ப தில்லை. இவற்றிற் சில தற்போது பயிரிடப்படு கின்றன. இவ்வகையான பயிர்களைப் பிரபல்யப் படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இப்பயிர்களில் பல போசணைச் சத்துக்களும், மருத்துவக் குணங்களும் அடங்கியுள்ளன. உண்ணக் கூடிய பல இலை மரக்கறிகள் அட்டவணை 3இல் தரப்பட்டுள்ளன. வர்த்தக ரீதியில் பயிரிடப்படும் இலை மரக்கறிகள் நகர்ப்புறச் சந்தைகளில் பிரபல்யமடைந்துள்ளன.

## இலை மரக்கறிகளை உற்பத்தி செய்தல்

இலங்கையில் எல்லாப் பிரதேசங்களிலும் பெரும்பாலான இலை மரக்கறிகளைச் செய்கை பண்ண முடியும். இயற்கையாக வளரும் தாவரங்கள் குறிப்பிட்ட சில இடங்களிலேயே உள்ளன. பிரதானமாக கம்பஹா, கொழும்பு, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் வர்த்தக அடிப்படையிலான இலை மரக்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆரம்பத்தில் கொழும்பில் மாத்திரமே இவை உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால் நாளாந்தம் இவற்றின் கிராக்கி அதிகரித்தமையால் இலாபம் தரும் முயற்சியாக ஏனைய மாவட்டங்களிலும் பிரபல்யம் அடைந்து வருகின்றது.

இலை மரக்கறிகளை உற்பத்தி செய்யும் போது சுகாதாரத்திற்குத் தீங்கு ஏற்படாத வகையில் கவனமாக உற்பத்தி செய்ய வேண்டும். அடிக்கடி இவற்றை அறுவடை செய்வதால் மிக அவசியமான போதே பீடைநாசினிகளை விசிற வேண்டும். பீடைநாசினிகளை விசிறிய பின் அவற்றின் நச்சுத் தன்மை இல்லாமற் போகும் காலத்தை அடைந்த பின்னரே கீரை வகைகளை அறுவடை செய்ய வேண்டும். பொதுவாக இது இரு வாரங்களிற்கும் அதிகமானதாகும். நீர்ப்பாசனத்திற்கு அழுக்கு நீரைப் பயன்படுத்துவதால் பல தீங்குகள் ஏற்படலாம். இதேபோல் பொருத்தமில்லாத சேதனப் பசளைகளை இடல், வெள்ளம், போன்றவற்றால் ஈகோலி, கொலரா போன்ற நுண்ணுயிர்களும், மனிதருக்குத் தீங்கை ஏற்படுத்தும் புழுக்கள் என்பனவும் கீரையுடன் உடலிற் செல்லலாம். எனவே, இவற்றைத் தவிர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். ஏற்றுமதி செய்யும் போது இவற்றால் ஏற்றுமதிச் சந்தை வாய்ப்புகள் இல்லாமற் போகலாம். வயிற்றுளைவு, வயிற்றோட்டம், கொலரா, புழுநோய் என்பனவும் பரவலாம்.

இலங்கையில் ஒன்பது இலை மரக்கறிகள் வர்த்தக ரீதியில் பயிரிடப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றைப் பயிரிடுவது தொடர்பான தொழில் நுட்பங்கள் இப்பிரசுரத்தில் தரப்பட்டுள்ளன.

## பொன்னாங்காணி (*Alternanthera sessilis*)

வர்த்தக ரீதியில் செய்கைபண்ணப்பட்டு விற்பனை செய்யப்படும் பிரதான இலை மரக்கறி பொன்னாங்காணியாகும். இது பிரபல்யமான சுவையான உணவாகும். இதில் அதிகளவில் விற்றமின்கள், கல்சியம் இரும்பு என்பன அடங்கியுள்ளன.

சந்தையில் விற்பனை செய்யப்படும் இலை மரக்கறிகளில் பொன்னாங்காணி முதலிடம் வகிப்பதற்கு பல காரணிகள் உள்ளன. அவையாவன:

1. பிரபல்யமான போசாக்கான கீரை, சிறந்த சுவை. வறை தயாரிப்பதற்கு மிகவும் உகந்தது.
2. கொண்டு செல்லும் போது குறைவான அளவில் பாதிக்கப்படல்.
3. இலகுவாகப் பயிர்செய்யக் கூடியது.
4. பயிரை ஸ்தாபிப்பதற்கும், பராமரிக்கவும் அதிகளவு மூலதனம் அவசியமில்லை.
5. பயிரை ஸ்தாபித்து 2 வருடங்கள் வரை தொடர்ச்சியாக (மாதந்தோறும்) அறுவடை செய்யலாம்.
6. ஒரு ஏக்கர் பொன்னாங்காணியிலிருந்து வருடமொன்றில் ஒரு இலட்சம் ரூபா வரை நிகர இலாபத்தைப் பெறலாம்.

### காலநிலைத் தேவை

பள்ளநாட்டு ஈர வலயம் இப்பயிர்ச்செய்கைக்கு மிகவும் உகந்தது. வருடம் முழுவதும் நீர் கிடைக்குமாயின் ஏனைய பிரதேசங்களிலும் இலகுவாகப் பொன்னாங்காணியைச் செய்கை பண்ணலாம்.

### மண்

மண் எப்போதும் ஈரமாக இருக்க வேண்டும். ஆனால் நீர் தேங்கி நிற்கக் கூடாது. எனவே, நன்கு நீர் வடிந்து செல்லக் கூடிய பள்ளமான இடங்கள் (வயல்கள்) இதற்குப் பொருத்த மானவையாகும். நீர் கிடைக்கக் கூடிய உயரமான இடங்களிலும் இதைனச் செய்கைபண்ணலாம். 6.00 7.00 வரையான பீ.எச். பெறுமானமுள்ள மிகக் குறைவான அமிலத் தன்மையான மண் பொன்னாங்காணிச் செய்கைக்கு மிகவும் உகந்ததாகும்.

பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க மழைக்காலத்தைத் தெரிவு செய்தல் நல்லது.

### வர்க்கங்கள்

தோற்றத்தைப் பொறுத்து பொன்னாங் காணியைச் செடி, கொடி என இரு வகையாகப் பிரிக்கலாம்.

கொடி வகை

வர்த்தக ரீதியில் செய்கைபண்ணப்படும் வர்க்கமாகும். இலைகளின் தோற்றம், தண்டின் நிறம் போன்ற இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு இதனை மேலும் பல பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

1. முட்டை (நீள் வட்ட) வடிவான இலைகளும், இளம் பச்சை நிறத் தண்டையும் கொண்ட வர்க்கம்.

பிலியந்தலை வர்க்கம், பூ பொன்னாங்காணி எனவும் அழைக்கப்படுகின்றது. இவற்றின் கணு



படம் 1

இடைவெளி குறுகியது. எனவே, ஒரு பிடியில் அதிகளவான இலைகள் காணப்படும். மிகவும் பிரபல்யமான வர்க்கமாகையால் இதற்கு சந்தையில் சிறந்த விலை கிடைக்கும் (படம் 1).



படம் 2

2. முட்டை (நீள் வட்ட) வடிவான இலைகளும், கபில பச்சை கலந்த நிறத் தண்டையும் கொண்ட வர்க்கம்.

இவ்வர்க்கத்தில் தண்டின் நிறம் மாற்றமடையக் கூடியது. இதில் கபிலம் அல்லது பச்சை நிறம் கலந்தோ அல்லது தனித்தனியாகவோ காணப்படலாம். இவ்வர்க்கத்தின் கணு இடை வெளியும் குறுகியதாகும் (படம் 2).

3. நீள் வட்டமான நீண்ட இலைகளும், கபிலம் அல்லது பச்சை நிறம் கலந்த தண்டையும் கொண்ட வர்க்கம்.

இவ்வர்க்கத்தின் இலைகள் பெரிய, நீண்ட வடிவானவை. தண்டு கபிலம் அல்லது பச்சை நிறமானது. கணு இடைவெளி நீளமானது. ஒரு பிடியில் உள்ள தண்டுகளின் அளவு அதிகமானதாகும். சந்தையில் அதிகளவில் காணக்கூடிய வர்க்கம் (படம் 3).



படம் 3

4. அழகான இலைகளையும், பச்சை அல்லது கபில நிறமான தண்டையும் உடைய வர்க்கம்.

இலைகள் சிறிய, நீண்ட தோற்றமுடையன. கணு இடைவெளி நீளமானது. மூலிகைப் பொன்னாங்காணி எனவும் இவ்வர்க்கம் அழைக்கப்படுகின்றது (படம் 4).

### செடி வகைகள்

செடிப் பொன்னாங்காணி பல நிறங்களைக் கொண்டிருக்கும். சிவப்பு, பச்சை, மஞ்சள் நிறமாகவோ அல்லது இந்நிறங்கள் கலந்தோ காணப்படலாம். அதிகளவில் அலங்காரத் தாவரமாகவே செய்கைபண்ணப்படுகின்றது. இவற்றில் பச்சை நிறமான வர்க்கம் உணவிற்கு ஏற்றது.

இவற்றைத் தவிர மிகப் பெரிய இலையைக் கொண்ட, வெளிநாட்டு பொன்னாங்காணி எனப்படும் பல வர்த்தக வர்க்கங்களும் உள்ளன. இவற்றின் விளைச்சல் அதிகமாயினும், உருசி இல்லாதவை. எனவே, பிரபல்யமடையவில்லை.

### நடுகைப் பொருட்கள்

தண்டுத் துண்டங்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. 10-12 ச.மீ அல்லது இதனை விட நீளமான துண்டங்களை நடுவதற்குப் பயன்படுத்தலாம்.

இயற்கையாக விதைகள் மூலமும் பரவலாம். ஆனால், இவற்றில் தூய தன்மையை எதிர்பார்க்க முடியாது.

### நிலத்தைப் பண்படுத்தலும், நடுகையும்

பொன்னாங்காணியை நடுகை செய்ய மேட்டு நிலத்தை அல்லது பள்ளமான இடத்தை (வயலை) தெரிவு செய்யலாம். தெரிவு செய்யப்பட்ட இடத்திற்கேற்ப நிலத்தைத் தயார் செய்து நடுகை செய்யவேண்டும்.

படம் 4



**பள்ளமான இடத்தில் (வயலில்) நடல்**

மண்ணைப் புரட்டி, களைகள் சிதைவடைய விடவும். வயலில் நீரை விட்டு, மண் கட்டிகளை உடைத்து நிலத்தை மட்டப்படுத்தவும். மேலதிக மான நீர் வடிந்தோடுவதற்கு வசதியாக ஆழமற்ற கான்களை அமைக்கவும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட நிலத்தில் பொன்னாங் காணித் தண்டை நடுகை செய்ய முடியும்.

நடுகை

வயலில் உள்ள நீரை வடிக்கவும். சேறு உலர்வதற்கு முன் பொன்னாங்காணித் தண்டுகளை மெல்லிய படையாக வயல் முழுவதும் பரவவும். தண்டுகள் நிலத்தில் சற்று புதையத் தக்கவாறு மண் வெட்டியால் அல்லது மட்டப்படுத்தியால் மெதுவாக அமர்த்தி விடவும். அல்லது சற்று மூடக் கூடியவாறு மண் படையொன்றை விசிறவும். இதன் பின் உலர் காலநிலை நிலவுமாயின் 3-4 நாட்களுக்கு தென்னோலையால் மூடி வைக்கவும்.

## மேட்டு நிலச்செய்கை

மண்ணைப் புரட்டி களைகளைக் கட்டுப்படுத்தவும். மண் கட்டிகளை உடைத்துத் தூளாக்கவும். இந் நிலத்தில் பொருத்தமான அளவில் பாத்திகளைத் (பள்ளமானவை) தயார் செய்யவும். பாத்திகளில் நீர் வடிந்து செல்வதற்கு வசதியாகச் சிறிய கான்களைப் பாத்திகளைச் சுற்றியும், நடுவிலும் அமைக்கவும். இவ்வாறு தயார் செய்யப்பட்ட பாத்தியில் துண்டங்களை நடுகை செய்யலாம்.

## நடுகை செய்தல்

சரியான இடைவெளிக்கேற்பவோ அல்லது எழுந்தமானமாகவோ ஓரிடத்தில் ஒரு துண்டத்தை நடவும். வரிசைகளுக்கிடையே 20 ச.மீ இடைவெளியும், வரிசையில் துண்டங்களுக்கிடையே 10 ச.மீ இடைவெளியிலும் நடல் வேண்டும். துண்டங்களை 3-4 நாட்களுக்கு தென்னை ஓலைகளால் மூடி வைக்கவும். பொருத்தமான முறையில் தினந்தோறும் நீரூற்றவும்.

## நீர்ப்பாசனம்

பொன்னாங்காணித் துண்டங்களை நடுகை செய்தது முதல் மண்ணின் மேற்பரப்பில் ஈரம் இருக்கத்தக்கவாறு நீரூற்ற வேண்டும். தேவைக்கதிகமாக நீரூற்ற வேண்டாம்.

மேற்பரப்பில் நீரைத் தெளிப்பதனாலோ அல்லது பாத்திகளை வெள்ளப்படுத்துவதன் மூலமோ நீரை வழங்க முடியும். பள்ளமான இடங்களில் நீர் தேங்கி நிற்பதால் அடிக்கடி நீர்ப்பாசனம் செய்யத் தேவையில்லை. மேட்டு நிலங்களில் அடிக்கடி நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

பொன்னாங்காணி குறுகிய காலத்திற்கு நீர் தேங்கி நிற்பதைச் சகித்து வளரும். ஆனால் நீண்ட காலத்திற்கு நீர் தேங்கி நிற்பதால் பயிர்கள் பாதிக்கப்படலாம்.

## பசளை இடல்

இதற்குச் சேதன, இரசாயனப் பசளைகளை இடலாம்.

### சேதனப் பசளைகள்

வர்த்தக ரீதியில் செய்கைபண்ணும் போது சேதனப்பசளையாக கோழியெரு பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. சாணத்தைப் பயன் படுத்தும் போது களைகள் பெருகுவதற்கான வாய்ப்புகள் உள்ளதால், விவசாயிகள் இதனை விரும்புவதில்லை. கோழியெருவைப் பயன்படுத்து வதால் வட்டப்புழுக்களின் தாக்கம் குறையும். கோழி எருவை இடும்போது அதிலிருந்து வெளியேறும் அமோனியா வாயு இலைகளைப் பாதிக்கும். எனவே கோழி எருவை இட்டபின் நீர்ப்பாசனம் செய்து 3-4 நாட்களின் பின்னர் நடவும். ஹெக்டயரொன்றிற்கு 10 மெ.தொ சேதனப் பசளை அவசியமாகும்.

### இரசாயனப் பசளைகள்

அதிக விளைச்சலைப் பெறச் சேதனப் பசளைகளை விட இரசாயனப் பசளைகளையும் இடல் வேண்டும். 1000 சதுர மீற்றர் (1/4 ஏக்கர்) பரப்பிற்கு இட வேண்டிய பசளைகளின் அளவும், வகையும் கீழே தரப்பட்டுள்ளன. இதற்கேற்ப உங்கள் தோட்டத்திற்கு அவசியமான பசளைகளின் அளவைத் தீர்மானித்துக் கொள்ள முடியும்.

அடிக்கட்டுப்பசளை

துண்டங்களை நடுவதற்கு 1-2 நாட்களுக்கு முன் பின்வரும் தனிப்பசளைகளை இட்டு மண்ணுடன் கலந்த பின் நீர்ப்பாசனம் செய்யவும்

| | |
|---|---|
| யூறியா | 9.0 கிலோ கிராம் |
| செறிந்த சுப்பர் பொசுபேற்று | 13.5 கிலோ கிராம் |
| மியூறியேற்றுப் பொட்டாசு | 10.0 கிலோ கிராம் |

மேற்கட்டுப் பசளை

1. முதலாவது தடவை அறுவடை செய்து 2-3 நாட்களின் பின் 9 கிலோ கிராம் யூறியாவை இடவும்.
2. இரண்டாவது தடவை அறுவடை செய்த பின் அல்லது அதன்பின் அறுவடை செய்யும் ஒவ்வொரு தடவையின் பின்னரும் 5 கிலோ கிராம் யூறியா, 1.5 கிலோ கிராம் மியூறியேற்றுப் பொட்டாசு என்பனவற்றை இடவும்.
3. ஒவ்வொரு 6 மாதங்களுக்கொரு தடவை 6.5 கிலோ கிராம் செறிந்த சுப்பர் பொசுபேற்றை இடவும்.

மேற்கட்டுப் பசளைகளை இட்ட பின் இலைகளிலுள்ள பசளை நன்கு கழுவிச் செல்லும் வண்ணம் நீரூற்றவும்.

### களைக்கட்டுப்பாடு

நிலத்தைப் பண்படுத்தும் போதே இயலுமான வரை களையைக் கட்டுப்படுத்தவும். துண்டங்களை நடுகை செய்த பின் முளைக்கும் களைகளைக் கையால் பிடுங்கி அகற்றவும். தோட்டத்தில் பயிர் இருக்கும் வரை கிரமமாகக் களைகளைப் பிடுங்கி அழிக்கவும்.

### நோய்கள்

கபிலப்புள்ளி நோய்



படம் 5

சேர்க்கஸ்போரா என்ற பங்கசு இனத்தால் ஏற்படும் நோயாகும். இலைகளில் சிவப்புக் கலந்த கபிலப் புள்ளிகள் தோன்றும். பின்னர் இவை இலை முழுவதும் பரவி இறுதியில் இலை கபில நிறமாகி உதிர்ந்து விழும். நோய் அறிகுறிகளை முதிர்ந்த இலைகளில் அதிகளவில் காண முடியும் (படம் 5).

2. வெண் துருநோய்

எல்பியுகோ என்ற பங்கசு இனத்தினால் இந்நோய் ஏற்படும். இலைகளின் கீழ்ப்புறம் வெண்ணிறப் புள்ளிகள் தோன்றும். நோய் தீவிரமடையும் போது இலைகளின் கீழ்ப்புறம் காணப்படும் புள்ளிகளில் தூள் (மா) போன்று இருப்பதை அவதானிக்க முடியும். நோய் ஏற்பட்ட தாவரத்தின் தண்டின் அடிப்புறம் வீங்கிக் காணப்படும்.



படம் 6

நுனியில் உள்ள இலைகள் கீழ்ப்புறம் சுருண்டு, தாவரத்தின் வளர்ச்சி தடைப்படும் (படம் 6).

நோயைக் கட்டுப்படுத்தல்

1. பாத்திகளில் நீர் தேங்கியிருப்பதைத் தடுக்க வேண்டும்.
2. பாதிக்கப்பட்ட தாவரத்தைப் பிடுங்கி எரிக்க வேண்டும்.
3. பொட்டாசியம் அடங்கிய பசளைகளை இடவேண்டும்.
4. அநாவசியமாக நைதரசன் பசளைகளை இடுவதைத் தவிர்த்தல்.
5. விரைவில் அறுவடை செய்தல்.
6. நோய் ஏற்பட்ட எல்லாத் தோட்டங்களிலும் அறுவடை செய்து அகற்றி விடல் வேண்டும்.

கீரைகளுக்கு விவசாய இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துவதை இயலுமானவரை தவிர்த்துக் கொள்வது உகந்தது. ஆனால், நோயை வேறு வழிகளில் கட்டுப்படுத்த முடியாமற் போனால் மாத்திரம் அறுவடை செய்த பின் பொருத்தமானதொரு பங்கசு நாசினியைத் தோட்டத்திற்கு விசிறல் வேண்டும்.

பங்கசுநாசினிகளை விசிறல்

பின்வரும் பங்கசுநாசினிகளில் ஏதாவதொன்றில் 2 கிராமை ஒரு லீற்றர் நீரிற் கரைத்து விசிறல் வேண்டும்.
மங்கோசெப், மனெப், டகோனில். பங்கசு நாசினிகளை விசிறி 14 நாட்களின் பின்னரே அறுவடை செய்ய வேண்டும்.

பீடைகளின் தாக்கம்

1. இலைச் சுருட்டிப்புழு (ஒமியோடிஸ் இன்டிகாடா)
   குடம்பிகள் இலைகளைச் சுருட்டி, உள்ளிருந்து இலையை உணவாகப் பயன்படுத்துவதால் தாக்கம் ஏற்படும்
2. இலையுண்ணிப்புழு
   செலிபூஸ் இனத்தைச் சேர்ந்த குடம்பிகள் இலையை உண்பதால் தாக்கம் ஏற்படும்.
3. இலையுண்ணும் வண்டுகள்
   கீடோனிமா இனத்தைச் சேர்ந்த வண்டுகள் இலையை உண்பதால் தாக்கம் ஏற்படுகின்றது.
4. இலையுண்ணும் ஆமை வண்டுகள்
   கெசிடா இனத்தைச் சேர்ந்த வண்டாகும். இலைகளை உண்பதால், இலையின் நடுநரம்பு மாத்திரம் மீதமாக இருக்கும்.
5. அழுக்கணவன்:
   இலை சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் தாக்கம் ஏற்படும். பாதிக்கப்பட்ட இலை விளிம்புகள் சுருங்கிக் காணப்படும்.

6. பனிப்பூச்சிகள்
இவை சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் தாக்கம் ஏற்படும். பாதிக்கப்பட்ட இலை விளிம்புகள் கீழ்ப்பக்கமாகச் சுருளும்.

## பீடைகளைக் கட்டுப்படுத்தல்

கீரை வகைகள் பச்சையாகவோ அல்லது வறையாகவோ உண்ணப்படுவதாலும், குறைந்த இடைவெளியில் அறுவடை செய்யப்படுவதாலும், விவசாய இரசாயனங்களை விசிறுவதை இயலுமான வரை தவிர்க்க வேண்டும்.

பீடைகளின் தாக்கம் ஆபத்தானதாக இருப்பின் முதலில் கீரையை வெட்டவும். இவற்றில் உண்ணக் கூடியவற்றை வேறாக்கி மற்றையவற்றை எரிக்கவும். இதனால் பூச்சிகளின் வாழ்க்கைச் சக்கரத்தில் சில பகுதிகள் இல்லாது போகும். 1 1/2-2 கிழமைகளின் பின் புதிய துளிர்கள் உருவாகும் போது, பூச்சிநாசினிகள் மிக அத்தியாவசியம் எனக் கருதினால் மட்டும் பின்வரும் நாசினிகளில் ஏதாவது ஒன்றை மாத்திரம் விசிறவும்.

* நிம்சால் எப்
இலைச் சுருட்டிப்புழு, இலையுண்ணும் புழு, அழுக்கணவன், பனிப்பூச்சிகள் என்பனவற்றைக் கட்டுப்படுத்த உகந்தது. இந்நாசினியில் 01 மில்லி லீற்றரை ஒரு லீற்றர் நீரில் கலந்து விசிறவும்.

* அற்றபுரோன்
இலைச்சுருட்டிப்புழு, இலையுண்ணும் புழு, இலையுண்ணி வண்டு என்பனவற்றைக் கட்டுப்படுத்த உகந்தது. இந்நாசினியில் ஒரு மில்லி லீற்றரை 1 லீற்றர் நீரில் கலந்து விசிறவும்.

* ரெபோன்
இலையுண்ணும் வண்டு, ஆமை வண்டு என்பனவற்றைக் கட்டுப்படுத்த உகந்தது. இதில் ஒரு மில்லி லீற்றரை ஒரு லீற்றர் நீருடன் கலந்து விசிறவும்.

பீடைநாசினிகளை விசிறி 14 நாட்களின் பின்னரே அறுவடை செய்ய வேண்டும்.

## அறுவடை

பொன்னாங்காணியை நடுகை செய்து 4 வாரங்களின் பின்னர் முதலாவது தடவை அறுவடை செய்ய முடியும். நில மட்டத்திலிருந்து சற்று உயரத்தில் வெட்டி அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்வதற்கு முதல் நாள் தோட்டத்திற்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். இதனால் அறுவடை செய்த உடன் விரைவில் பயிர்கள் வாடுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அறுவடை செய்வதும் இலகுவாக இருக்கும்.

பயிர் நீரை உறிஞ்சி விறைப்பாக இருக்கும் காலை நேரத்தில் அறுவடை செய்வது உகந்தது.

முதலாவது தடவை அறுவடை செய்து 3-4 வாரங்களின் பின் அடுத்த தடவை அறுவடை செய்ய முடியும். 4 வாரங்களை விடப் பிந்துமாயின் தண்டுகள் முற்றி, பூக்கும். இதனால் தரம் குன்றும்.

ஆரம்பத்தில் விளைச்சல் குறைவாகவே இருக்கும். இதன்பின் விளைச்சல் படிப்படியாக அதிகரித்து 2வது வருடத்திலிருந்து மீண்டும் குறையத் தொடங்கும்.

வெட்டிய கீரைகளை 150 200 கிராம் கொண்ட பிடிகளாகக் கட்டவும். இவ்வாறு கட்டிய 100-150 பிடிகளை ஈரமான சாக்கில் அல்லது வலை போன்ற பையிற் சுற்றி அன்றைய தினமே சந்தைக்கு அனுப்ப வேண்டும்.

1000 மீற்றர் (1/ 4 ஏக்கர்) பரப்பிலிருந்து ஒரு தடவை 1000 1500 கிலோ. கிராம் வரை விளைச்சலாகப் பெறலாம்.

## பயிர்ச் சுழற்சி

2 வருடங்களின் பின் பொன்னாங்காணியின் விளைச்சல் படிப்படியாகக் குறையும். எனவே, இச்சந்தர்ப்பத்தில் தோட்டத்திலிருந்து பொன்னாங்காணியைப் பிடுங்கி விட வேண்டும். அதே இடத்தில் பொன்னாங்காணியை மீண்டும் நடுகை செய்ய முன் வேறு பயிர்களைச் செய்கைபண்ண வேண்டும்.

ஒரே இடத்தில் தொடர்ச்சியாக ஒரு பயிரைச் செய்கைபண்ணும் போது நோய், பீடைகளின் தாக்கம் அதிகமானதாக இருக்கும். அத்துடன் மண்ணின் வளம் குன்றாமல் பாதுகாப்பதும் சிரமமானதாகும். எனவே பயிர்ச் சுழற்சியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## வல்லாரை (*Centella asiatica*)

ஆரம்பத்திலிருந்தே இலங்கை மக்களிடையே வல்லாரை நன்கு பிரபல்யமான ஒரு கீரையாகும். இதற்கென உரித்தான விசேட சுவையின் காரணமாக வல்லாரைக்கு சந்தையில் சிறந்த கிராக்கி நிலவுகின்றது. இதில் மருத்துவ இயல்புகள் உள்ளதாக ஆயுர்வேத வைத்தியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வல்லாரையில் அதிகளவில் இரும்புச் சத்து உள்ளது.

**வர்க்கம்**

இப்பயிர் வளரும் முறையைக் கொண்டு பிரதானமாக இரு பிரிவுகளாகப் பிரிக்க முடியும்.

**1. செடி**

பற்றையாக ஓரிடத்தில் பல தாவரங்கள் வளரும். ஒரு செடியில் பொதுவாக 100-130 இலைகள் காணப்படும். காம்பின் நீளம் 10-15 ச.மீ வரை இருக்கும். மத்திய அளவான இலைகள். இலையின் நீளம் 2.5 ச.மீ ஆகும். அகலம் 4.5 ச.மீ ஆகும்.

**2. கொடி**

நடப்பட்ட நாற்றிலிருந்து பல செடிகள் முளைப்பதுடன், படரும். இதனால், தோட்டம் முழுவதுமே காணப்படும். படரிகளில் (ஓடியில்) ஆங்காங்கே வேர் உருவாகும். இவ்வேர் மண்ணிற் சென்று புதிய தாவரமாக வளரும்.

இலையின் பருமனிற்கேற்ப இதனை மூன்றாக வகைப்படுத்தலாம்.

**அ) பெரிய இலைகளைக் கொண்ட வர்க்கம்**

இவை மா வல்லாரை எனவும் அழைக்கப் படுகின்றது. இலையின் நீளம் 5.5 ச.மீ ஆகும். அகலம் 8.5 ச.மீ ஆகும். ஒரு செடியில் 4 6 படரிகள் வரை உருவாகும். காம்பின் நீளம் 15 ச.மீ வரை இருக்கும். மேலே குறிப்பிடப்பட்ட செடி வகையை விட இதன் வளர்ச்சி வீதம் அதிகமானதாக இருக்கும். எனவே, ஒரு அலகு நிலப்பரப்பிலிருந்து கூடிய விளைவைப் பெறமுடியும்.

**ஆ) மத்திய அளவான இலைகளை உடைய வர்க்கம்**

இதன் இலையின் நீளம் 2.5 ச.மீ ஆகும். அகலம் 4 ச.மீ ஆகும். காம்பின் நீளம் 10-15 ச.மீ. ஒரு செடியில் 30 இலைகள் காணப்படுவதுடன் 4-6 படரிகள் வரை உருவாகும். வர்த்தக ரீதியிலான பயிர்ச்செய்கையில் இவ்வர்க்கம் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது.

**இ) சிறிய இலைகளை உடைய வர்க்கம்**

இலையின் நீளம் 1.5 ச.மீ ஆகும். அகலம் 2.5 ச.மீ வரை இருக்கும். ஒரு செடியில் 10 இலைகள் வரை காணப்படுவதுடன், ஒரு செடியில் 3-5 படரிகள் உருவாகும். காம்பின் நீளம் 6-8 ச.மீ ஆகும். இது கொடி வல்லாரை என அழைக்கப் படுகின்றது. சந்தையில் இதற்கு கிராக்கி உள்ளது.

நீர் தேங்கி நிற்காத பள்ளமான இடங்களில் தனிப்பயிராகவும், மேட்டு நிலங்களில் வாழை, தென்னை, அகத்தி போன்ற ஏனைய பயிர்களின் கீழ் ஊடு பயிராகவும் வல்லாரையை இலகுவாகச் செய்கைபண்ணலாம். மண்ணில் நீர் தேங்கி நின்றால் வல்லாரை பாதிக்கப்படும்.

வீட்டுத்தோட்டங்களில் பாத்தியொன்றிலோ அல்லது பூச்சாடிகளிலோ வல்லாரையை நடுவதன் மூலம் வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். மண் பாதுகாப்புடன் சரிவான இடங்களில் வல்லாரையைச் செய்கைபண்ண முடியும்.

### காலநிலைத் தேவை

நீரைப் பெற்றுக்கொள்ள முடியுமாயின் இலங்கையின் எந்தப் பாகத்திலும் வல்லாரையைச் செய்கைபண்ணலாம். ஆனால் வருடம் முழுவதும் பரவலாக மழை பெய்யும் ஈரவலயம் மிக உகந்ததாகும். ஈர வலயத்தில் தேயிலை, தென்னை, இறப்பர் போன்ற பயிர்களின் கீழ் கொடி வல்லாரை இயற்கையாக வளருகின்றது.

நீர்ப்பாசனத்தின் கீழ் செடி வல்லாரை உலர் வலயத்தில் செய்கைபண்ணபடுகின்றது. மிகக் குறைவான அமிலத்தன்மையான 6-7 பீ.எச் பெறுமான முள்ள, சிறந்த நீர் வடிப்புள்ள மண் வல்லாரைச் செய்கைக்கு உகந்தது. பயிர்ச் செய்கையை மழைக்காலத்தில் ஆரம்பிப்பதனால் நட்டவுடன் செடிகள் வாடுவதைத் தவிர்க்க முடியும்.

### நடுகைப் பொருட்கள்

வட்டப் புழுக்களால் பாதிக்கப்படாத ஆரோக்கியமான செடிகளிலிருந்து அல்லது படரியிலிருந்து பெறப்பட்ட வேர் கொண்ட ஓரளவு முதிர்ச்சியடைந்த நாற்றுக்களை நடுவதற்குத் தெரிவு செய்ய வேண்டும். நன்கு வளர்ச்சியடைந்த செடியொன்றிலிருந்து நடுவதற்கு உகந்த 10-15 நாற்றுக்களைப் பெறலாம். செடியிலிருந்து நாற்றுக்களைப் பெற 2-3 நாட்களுக்கு முன் இலையை வெட்டி விடல் வேண்டும்.

100 சதுர மீற்றர் பரப்பில் நடுகை செய்வதற்குத் தேவையான நாற்றுக்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| செடி வகையும், மா வல்லாரையும் - | 5000-7500 நாற்றுக்கள் |
| மத்திய பருமனுள்ள இலையைக் கொண்ட கொடி வகை | 9000-10,000 நாற்றுக்கள் |

பூக்கள், காய்கள் உருவாகும் வல்லாரை வர்க்கங்களை விதைகள் மூலமும் இனப்பெருக்கம் செய்யலாம். ஆனால் இவற்றின் தூய தன்மையைப் பற்றி எதுவும் கூற முடியாது.

### நடுகை இடைவெளி

| | |
|---|---|
| செடி வகையும், மா வல்லாரையும் - | 20×20 ச.மீ |
| மத்திய பருமனுள்ள இலையைக் கொண்ட கொடி வகை | 15×15 ச.மீ |

இரு வர்க்கங்களிலும் ஓரிடத்தில் 2-3 நாற்றுக்கள் வரை நடலாம். கொடி வகைகளை எழுந்தமானமாக நடுகை செய்யலாம்.

### நிலத்தைப் பண்படுத்தல்

பயிர்செய்கைக்குத் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் நீர் தேங்கி நிற்காதவாறு உயரமான பாத்திகளையோ அல்லது பள்ளமான பாத்திகளையோ அமைப்பதற்கு நிலத்தைத் தயார் செய்ய வேண்டும். மண் இலகுவாக இருக்குமாயின் வல்லாரையின் ஆணிவேர் ஒரு அடி ஆழம் வரை செல்லும்.

#### பள்ளமான இடங்களில் செய்கை பண்ணல்

நீர் தேங்கி நிற்காத பள்ளமான (வயல்) நிலங்களைத் தெரிவு செய்யலாம். மண்ணை உழுது, கட்டிகளை உடைத்துத் தூர்வையாக்கி, நிலத்தை மட்டப்படுத்தவும். நீர் நன்கு வடிந்து செல்வதற்கு வசதியாக வயலைச் சுற்றியும், வயலின் மத்தியிலும் கான்களை அமைக்கவும். மழைக்காலத்தில் நீர் தேங்கி நிற்பதால், பள்ளமான இடங்களில் உள்ள வல்லாரைத் தோட்டம் அழிந்து போகலாம். எனவே, நீர் வடிந்து செல்வதற்கேற்ற வசதிகளைக் கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

செடி வல்லாரையை நடுவதற்கு வயலின் உள்ளே பாத்திகளை அமைப்பது உகந்தது. ஒரு மீற்றர் அகலமான உயர் பாத்திகள் இருப்பின் நல்லது.

#### மேட்டு நிலங்களில் செய்கைபண்ணல்

களைகளைக் கட்டுப்படுத்தக் கூடியவாறு மண்ணைப் புரட்டி, கட்டிகளை உடைத்துத் தூர்வையாக்கவும். நீர் வடிந்து செல்வதற்கேற்ப தேவையான கான்களை அமைக்கவும். செடி வல்லாரையை ஒரு மீற்றர் அகலமான பாத்திகளில் நடுவது உகந்தது.

### நாற்றுக்களை நடல்

தயார் செய்யப்பட்ட நிலத்தில் சரியான இடைவெளியில் 2-3 நாற்றுக்களை நடுகை செய்ய வேண்டும். நடுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் போதியளவு சேதனப் பசளைகளையும், அடிக்கட்டுப்பசளையையும் இட்டு மண்ணுடன் நன்கு கலந்து விடல் வேண்டும். நடும் போது மண் ஈரமாக இருப்பது அவசியமானதாகும். மாலை வேளையில் நடுவதால் நாற்றுக்கள் வாடுவதைத் தவிர்க்க முடியும்.
நாற்றை நடுகை செய்தபின் உலர் காலம் நிலவுமாயின் நிழல் வழங்க வேண்டும். இதற்கு தென்னை ஓலையைப் பயன்படுத்தலாம்.

### பசளை இடல்

வல்லாரைக்கு சேதனப் பசளைகள், இரசாயனப் பசளைகள் ஆகிய இரண்டையும் இடல் வேண்டும்.

### சேதனப் பசளை

உக்கிய சாணம், கோழியெரு, கூட்டெரு, இலை குழைகள் என்பனவற்றைச் சேதனப் பசளையாக இடமுடியும். வர்த்தக அடிப்படையிலான பயிர்ச்செய்கையில் கோழியெரு பரவலாக இடப்படுகின்றது. இதனால் களைகள் பரவுவது தடுக்கப்படுவதோடு, வட்டப் புழுக்களைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றது. நடுவதற்கு ஒரு கிழமைக்கு முன் கோழியெருவை இட்டு மண்ணுடன் நன்கு கலந்து விடல் வேண்டும். இதன் பின் தினந்தோறும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். ஏனைய சேதனப் பசளைகளாயின் நடுவதற்கு 3-4 நாட்களுக்கு முன் இட்டு, மண்ணுடன் நன்கு கலந்துவிடல் வேண்டும். இதன்பின் ஒவ்வொரு தடவையும் அறுவடை செய்த பின்னர் உகந்த சேதனப் பசளையை இடல் வேண்டும். ஆயிரம் சதுர மீற்றர் பரப்பிற்கு ஒரு தொன் சேதனப் பசளையை இடல் வேண்டும். இலைகளில் விழுந்து காணப்படும் பசளைகள் கழுவிச் செல்லத்தக்கவாறு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

### இரசாயனப் பசளைகளை இடல்

சேதனப் பசளைகளை மாத்திரம் இடுவது போதுமானதல்ல. அத்துடன் கூடிய விளைச்சலைப்பெற இரசாயனப் பசளைகளையும் இடல் வேண்டும். இப்பசளைகளை அடிக்கட்டாகவும், மேற்கட்டாகவும் இரு தடவைகளில் இடல் வேண்டும்.

### அடிக்கட்டுப் பசளை

நடுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன், பின்வரும் பசளைகளை இட்டு மண்ணுடன் நன்கு கலந்து விடவும்.

1000 சதுர மீற்றர் பரப்பிற்கு (1/ 4 ஏக்கரிற்கு) சிபாரிசு செய்யப்பட்டுள்ள பசளைகள் வருமாறு

| | | |
|---|---|---|
| யூறியா | - | 9.00 கி.கி |
| செறிந்த சுப்பர் பொசுபேற்று | - | 13.5 கி.கி |
| மியூறியேற்றுப் பொட்டாசு | - | 10.0 கி.கி. |



படம் 7

மேற்கட்டுப் பசளை

1000 சதுர மீற்றர் பரப்பிற்குப் பின்வரும் பசளைககளை இடவும்.

1. நட்டு 4 கிழமைகளின் பின்
யூரியா - 9.0 கி.கி

2. ஒவ்வொரு தடவை அறுவடை செய்த பின்னரும்
யூரியா - 4.5 கி.கி
மியூறியேற்றுப் பொட்டாசு - 1.5 கி.கி

3. 6 மாதங்களுக்கொரு தடவை
செறிந்த சுப்பர் பொசுபேற்று - 6.5 கி.கி

தோட்டத்திற்கு மேற்கட்டுப் பசளையை இட்ட பின் இலைகளில் உள்ள பசளைகள் கழுவிச் செல்லத் தக்கவாறு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

நீர்ப்பாசனம்

வரட்சியினால் வல்லாரையின் வளர்ச்சி பாதிக்கப்படலாம். மண்ணில் தொடர்ச்சியாக ஈரப்பதன் இருப்பது அவசியமானதாகும். எனவே, பொருத்தமான முறையில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். தேவைக்கதிகமாக நீர்ப்பாசனம் செய்யக்கூடாது.

களைக்கட்டுப்பாடு

தோட்டத்தில் களைகள் இருக்குமாயின் விளைச்சல் குறையும். அறுவடை செய்யும் போது வல்லாரையுடன், களைகள் கலந்து இருக்குமாயின் அதன் தரம் குன்றும். எனவே, விற்பனை செய்வது சிரமமானதாய் இருக்கும். நோய், பீடைகள் பரவுவதற்கும் களைகள் உதவும். இயலுமான வரை களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நோய்கள்

1. வைரசு நோய்

வல்லாரையைப் பாதிக்கும் இரு வகையான வைரசுகள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன. அவையாவன கெக்கரி சித்திர வடிவ வைரசு, பொற்றி (Poty) வைரசு என்பனவாகும். இவற்றின் தாக்கத்தினால் நோய்த் தாக்க அறிகுறிகள் ஏற்படுகின்றன (படம் 7ஐப் பார்க்கவும்).

நோய் அறிகுறி

முதலில் இலைகளில் மஞ்சட் பச்சை நிறமான புள்ளிகள் சித்திர வடிவில் தோன்றும். இளம் இலைகள் சுருளும். இலை சிறிதாகி மஞ்சள் நிறமாகும். பின்னர் இலைகளில் கபில நிறமான புள்ளிகள் தோன்றும். சில வேளைகளில் இலை ஓரங்களும், இலை நரம்பும் கபில நிறமாகும். நோய் தீவிரமாக ஏற்படும் போது தாவரம் வளர்ச்சி குன்றி இறக்கும்.

நோயால் பாதிக்கப்பட்ட தாவரத்தின் சாற்றை உறிஞ்சும் அழுக்கணவன், ஆரோக்கியமான தாவரத்தின் சாற்றை உறிஞ்சும் போது நோய் பரவும். நோயால் பாதிக்கப்பட்ட தாவரத்தைப் பிடுங்கி அழிப்பதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்தலாம். வேறு பரிகரணங்கள் இல்லை.



படம் 6

**2. இலைப்புள்ளி நோய்**

சேர்கஸ்போரா என்ற பங்கசு இனத்தினால் ஏற்படுகின்றது. இலையில் ஊதா நிறமான வட்டப் புள்ளிகள் உருவாகும். பின் இவை மஞ்சள் நிறமாகி இறக்கும். நோயைக் கட்டுப்படுத்த முடியாமற் போனால் மாத்திரம் இலைகளை வெட்டி அகற்றிய பின் மங்கோசெப், மனேப், அன்ரகோல், டகோனில் போன்ற நாசினிகளில் ஏதாவதொன்றில் 2 கிராமை ஒரு லீற்றர் நீரிற் கரைத்து விசிறல் வேண்டும்.

**3. வேர் அழுகல் நோய்**

பியுசேறியம், ஸ்கெலறோடியம் போன்ற பங்கசு இனங்களினால் வல்லாரையின் வேர் அழுகும்.

**நோய் அறிகுறி**

வேரும், தண்டும் அழுகுவதனால் அல்லது இலைகள் மஞ்சள் நிறமடைவதால் தாவரம் உலர்ந்து இறக்கும். நோயைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் மாத்திரம் கப்ரான், திராம் போன்ற நாசினிகளில் ஏதாவதொன்றை விசிறல் வேண்டும். நோயுற்ற தாவரத்தைப் பிடுங்கியபின் அதனைச் சூழவுள்ள பகுதிக்கும் தரை நன்கு நனையும் வரை பூவாளியினால் பங்கசுநாசினிக் கரைசலை ஊற்றவும். 2 கிராம் பங்கசு நாசினியை ஒரு லீற்றர் நீரிற் கரைத்து விசிறல் வேண்டும்.

**4. வாடல் நோய்**

சூடோமொனாஸ் சொலனோசியாரம் என்னும் பக்றீரியாவினால் ஏற்படுகின்றது. சடுதியாகத் தாவரம் வாடி இறக்கும். இந்நோய் ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த முடியாது.

**நோயைக் கட்டுப்படுத்தல்**

வல்லாரை இலைகள் உணவுக்குப் பயன்படுத்தப் படுவதால் விவசாய இரசாயனங்களை இயலுமான வரை தவிர்க்க வேண்டும். நோயைத் தவிர்ப்பதற் கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. நோயால் பாதிக்கப்பட்ட தாவரத்தைப் பிடுங்கி அழித்தல்.
2. களைகளைக் கட்டுப்படுத்தி, தோட்டத்தைச் சுத்தமாக வைத்திருத்தல்.
3. சூரிய வெளிச்சம் விழுவதற்கு வசதியேற்படுத்தல்.
4. ஆரோக்கியமான நடுகைப் பொருட்களை மாத்திரம் நடல்.
5. மண்ணின் நீர் வடிப்பை விருத்தி செய்தல்.
6. தேவைக்கதிகமாக நைதரசன் பசளைகளை இடுவதைத் தவிர்த்தல்.

**பீடைகள்**

**1. சாற்றை உறிஞ்சிக் குடிக்கும் மூட்டுப்பூச்சி (Halticus tibiales)**

கறுப்பு நிறமான சிறிய மூட்டுப்பூச்சி இலைகளின் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் தாவரம் பாதிக்கப்படும்.

சாற்றை உறிஞ்சிய இடத்தில் வெண்ணிறமான புள்ளிகள் தோன்றும். தாக்கம் அதிகமாக இருக்கும் போது முழு இலையுமே வெண்ணிற மாக மாறும் (படம் 8 ஐப் பார்க்கவும்). இதனைக் கட்டுப்படுத்த பூச்சிநாசினிகளை விசிற வேண்டிய தேவையேற்படின் அட்டபுரோன் அல்லது றெபொன் ஆகியவற்றில் ஏதாவதொன்றில் 1 மி.லீற்றரை, ஒரு லீற்றர் நீரில் கலந்து விசிறவும்.

**2. வட்டப் புழு**

மெலோயிடிகயின் (Meloidegyne) இனத்தைச் சேர்ந்த வேர் முடிச்சு வட்டப்புழுக்களால் தாக்கம் ஏற்படுகின்றது. இவ்வட்டப்புழு இனம் வல்லாரையின் வேரினுற் சென்று முடிச்சுக்களை உருவாக்குவதால், வேரினூடாக நீரும் போசணைப் பொருட்களும் கடத்தப்படுவதில்லை. இதைத் தவிர இவற்றின் தாக்கத்தினால் பங்கசு அல்லது பக்றீரியாவின் மூலம் வேரில் இரண்டாவது தொற்றலும் ஏற்படலாம்.

### அறிகுறிகள்

வளர்ச்சி தடைப்பட்டு, செடி கட்டையாக இருக்கும். இலை மஞ்சள் நிறமாகும். வேர்களில் முடிச்சுக்களைக் காணலாம். அசாதாரணமாக வேர் வீங்கும்.

### கட்டுப்படுத்தல்

1. ஆரோக்கியமான நாற்றுக்களை மாத்திரம் நடவும்.
2. சேதனப் பசளையாகக் கோழி எருவை இடவும்.
3. பயிர்ச் சுழற்சியைக் கடைப்பிடிக்கவும்.
4. தேவையில்லாமல் நைதரசன் பசளைகளை இட வேண்டாம்.

### அறுவடை செய்தல்

நன்கு பராமரிக்கப்பட்ட தோட்டமொன்றிலிருந்து நட்டு 100 நாட்களில் முதலாவது தடவை அறுவடை செய்ய முடியும். பல முறைகளில் அறுவடை செய்யலாம்.

1. நில மட்டத்திலிருந்து சற்று உயரமாக முழுச் செடியையும் வெட்டல். இங்கு வல்லாரைச் செடியிலிருந்து அடுத்த அறுவடையைப் பெற 2 மாதங்கள் வரை எடுக்கும்.

2. செடியில் முற்றியுள்ள இலைகளை மாத்திரம் தண்டுடன் அறுவடை செய்ய வேண்டும். இம் முறையில் 2 வாரங்களுக்கொரு முறை அறுவடை செய்யலாம்.

3. கொடியாகப் படரும் வல்லாரையாக இருப்பின் முதிர்ச்சியடைந்த இலைகளைக் காம்புடன் பிடுங்கி எடுக்கவும். இம் முறையில் அதிக தடவைகளில் அறுவடை செய்யலாம்.

4. கொடி வல்லாரையில் இலைக் காம்புகளின் நீளம் போதியளவாக இல்லாவிடில், படரி நிலத்துடன் தொடர்பு கொண்டிருக்கும் இடத்தில் வேருடன் அதனைப் பிடுங்க வேண்டும். இம் முறையில் இவற்றைச் சேகரிப்பது, விற்பனை செய்தல் என்பன சிரமமானதாக இருக்கும்.

அறுவடை செய்தபின் அளவிற்கதிகமாக முதிர்ச்சி அடைந்த, மஞ்சள் நிறமான நோய், பீடைகளால் பாதிக்கப்பட்ட இலைகள் என்பனவற்றைத் தவிர்த்து ஏனையவற்றைப் பிடிகளாகக் கட்டவும். இப்பிடிகளை வலைச் சாக்குகளில் அல்லது தென்னை ஓலைப் பெட்டிகளில் கவனமாக அடுக்கிக் கொண்டு செல்ல வேண்டும்.

### விளைச்சல்

4000 சதுர மீற்றர் (ஒரு ஏக்கர்) விஸ்தீரணத்திலிருந்து ஒரு தடவையில் 4000-5000 கிலோகிராம் விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### பயிர்ச் சுழற்சி

வல்லாரையை நடுகை செய்து 2-3 வருடங்களாகியதும் அதனைப் பிடுங்கிய பின் அவ்விடங்களில் வேறு பயிர்களைச் செய்கைபண்ண வேண்டும். ஒரே தோட்டத்தில் தொடர்ச்சியாக வல்லாரையைச் செய்கை பண்ணும் போது விசேடமாக வட்டப் புழுக்களின் தாக்கம் ஏற்படலாம். இதனைக் கட்டுப்படுத்துவதும் சிரமமானதாகும். வேறு நோய்த் தாக்கங்களும் அதிகமாக ஏற்படலாம்.

## சாறணை (*Trianthema portulacastrum*)

சாறணை ஓரளவு பிரபல்யமான கீரையாகும். இதற்குச் சந்தையில் குறிப்பிடத்தக்களவு கிராக்கி நிலவுகின்றது. சிறுநீர் இலகுவாக கழிவதற்கு சாறணை உதவுவதாக ஆயுர்வேத வைத்தியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறு நீரகத்தைச் சுத்தமாக்குவதுடன், இதில் கல் உருவாகுவதையும் தடுக்கும். மூன்று வகையான சாறணை வர்க்கங்கள் உள்ளன.

1. பச்சை நிறத் தண்டுடைய சாறணை. உணவிற்கெனச் செய்கைபண்ணப்படும் வர்க்கம்.
2. இளம் கபில நிறத் தண்டுடைய சாறணை உணவிற்கெனச் செய்கைபண்ணப்படும் வர்க்கம்.
3. இலையின் கீழ்ப்புறம் வெண்ணிறமான சாறணை
   உண்ணக் கூடிய இயற்கையாக வளரும் சாறணை ஆகும்.

பச்சை நிறத் தண்டுடைய சாறனை வர்த்தக ரீதியில் செய்கைபண்ணப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இலங்கையில் எப்பாகத்திலும் இலகுவாகச் செய்கைபண்ண முடியும்.

### நடுகைப் பொருட்கள்

பிரதானமாக விதைகள் மூலமே இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. தாவரம் இறக்கும் போதே விதைகள் உருவாகும். விதைகள் முதிர்ச்சி அடைந்ததும், தாவரத்தைப் பிடுங்கி விதைகளை வேறாக்கலாம். வீட்டுத் தோட்டத்தில் தண்டுகளை நடுகை செய்யலாம்.

### நிலத்தை ஆயத்தம் செய்தல்

சாறனையைப் பயிர் செய்ய சிறந்த நீர் வடிப்புள்ள மண் அவசியமாகும். நிலத்தை உழுது புரட்டி மண் கட்டிகளை உடைத்துத் தூர்வையாக்க வேண்டும். குறைந்த நீர்வடிப்புள்ள இடங்களில் உயர் பாத்திகளை அமைக்க வேண்டும்.

### நடுகை செய்தல்

நன்கு தயார் செய்யப்பட்ட நிலத்தில் விதைகளை நடல் வேண்டும். விதைகள் முளைப்பதற்கு அவசியமான ஈரப்பதன் இருப்பது அவசிய மாகும். விதைகள் முளைத்த பின் அடிக்கடி நீரூற்றுவது அவசியமாகும். பொதுவாக 2-3 நாட்களுக்கொரு தடவை நீர்ப்பாசனம் செய்தால் போதுமானதாகும். மண் உலர்ந்து போக விடக் கூடாது. வீட்டுத்தோட்டத்தில் 6-9 அங்குல நீளமான துண்டங்களை நடுகை செய்யலாம். 1-2 கணுக்கள் நிலத்தின் உள்ளே இருக்கத் தக்கவாறு நடுகை செய்ய வேண்டும்.

### பசளை இடல்

சேதனப் பசளைகளே பரவலாக இடப்படுகின்றது. குறைந்தளவில் இரசாயனப் பசளைகளும் இடப்படுகின்றன.

### சேதனப் பசளை

நன்கு உக்கிய கோழியெரு பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. உலர்ந்த சாணம், கூட்டெரு, இலை குழைகள் என்பனவற்றையும் பயன்படுத்தலாம். விதைப்பதற்கு இரண்டொரு நாட்களுக்கு முன் சேதனப் பசளைகளை மண்ணுடன் கலந்து விடல் வேண்டும். 10 சதுர மீற்றர் பரப்பளவிற்கு 25 கிலோ நன்கு உக்கிய கோழியெரு இடப்படுகின்றது.

### இரசாயனப் பசளை

நடுவதற்கு முன் பின்வரும் பசளைகளை இட்டு மண்ணுடன் நன்கு கலந்து விடவும்.
100 சதுர மீற்றர் பரப்பிற்கு

| | | |
|---|---|---|
| யூறியா | - | 1 கி.கி |
| செறிந்த சுப்பர் பொசுபேற்று | - | 1.5 கி.கி |
| மியூறியேற்றுப் பொட்டாசு | - | 1 கி.கி |

### அறுவடை

விதைத்து 20 நாட்களில் அறுவடை செய்து, விற்பனை செய்யலாம். சாறனை வேருடன் பிடுங்கியே அறுவடை செய்யப்படுகின்றது. தண்டை நடுவதாயின், முற்றாத பாகங்களை அறுவடை செய்து பயன்படுத்த முடியும். 100 சதுர மீற்றர் பரப்பிலிருந்து 400 கிலோ கிராம் விளைச்சலைப் பெற முடியும்.

## கொஹில *Lasia spinosa*

கொஹில பிரபல்யமான கீரையாகும். கழிவு நீரைப் பயன்படுத்தி வீட்டுத் தோட்டங்களிலும் செய்கைபண்ண முடியும். இதனை வர்த்தக அடிப்படையிலும் செய்கைபண்ணலாம். கொஹில தண்டு, கீரை என்பன சிறந்த இயல்புகளைக் கொண்டவையாகும். இதில் அதிகளவில் நார்த்தன்மை உள்ளதால் மூல நோயாளிகளுக்கும், வயிற்று நோயாளிகளுக்கும் உகந்தது.

### கொஹில வர்க்கங்கள்

1. உள்ளூர் கொஹில - இலைகள் பிரிந்து காணப்படாது.
2. வெளிநாட்டு கொஹில - இலைகள் பிரிந்திருக்கும்.

உள்ளூர் கொஹிலவின் வளர்ச்சி வீதம் குறைவாகவே இருப்பதுடன், விளைச்சலும் குறைவாகவே இருக்கும். ஆனால், வெளிநாட்டு

கொஹிலவின் வளர்ச்சி வேகம் அதிகமானதுடன், கூடிய விளைவையும் பெறலாம். இதன் தண்டு, உள்ளூர் வர்க்கத்தை விடத் தடிப்பானது. கூடிய மாத்தன்மை உடையது.

நீர் தேங்கி நிற்கும் இடங்களிலேயே கொஹிலவைச் செய்கைபண்ண முடியும். சதுப்பு நிலத்திற்கும் உகந்த பயிராகும். இதனால் இக்கீரை ஈர வலயத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. இதற்கு நிழல் உகந்ததும், நிழல் இல்லாவிடில் இலைகள் சிறியதாகும். கிராமப் பகுதிகளில் கிணற்றிற்கருகே நீர் தேங்கி நிற்கும் இடங்களில் வீட்டுத்தோட்டப் பயிராகச் செய்கை பண்ணப்படுகின்றது. நீர்ப்பாசனத்தின் கீழ் உலர் வலயத்திலும் செய்கைபண்ணப்படுகின்றது. விசேடமாக உலர் வலயத்தில் நீர் தேங்கி நிற்கும் இடங்களில் நன்கு வளர்ச்சி அடைகின்றது.

## நடுகைப் பொருட்கள்

25-30 ச.மீ நீளமான தண்டுள்ள நுனிப் பகுதி அல்லது இதே நீளமுள்ள தண்டுத் துண்டத்தைப் பயன்படுத்த முடியும். நடுவதற்கு முன் இலைகளை வெட்டி அகற்றவும்.

நுனியை நடுவதால் வளர்ச்சி விரைவானதாய் இருக்கும்.

## நிலத்தைப் பண்படுத்தல்.

நீர் கிடைக்கக் கூடிய இடங்களில் நீர் தேங்கி நிற்கத்தக்கவாறு, பாத்திகளைத் தயார் செய்ய வேண்டும். மண்ணைப் புரட்டி, தூர்வையாக்கிய பின் நடல் வேண்டும். நிழல் இருப்பின் மிகவும் நல்லது.

## நடுகை செய்தல்

நுனிப் பாகத்தை அல்லது கிழங்கை 30 பாகை சரிவாக வெட்டி ஓரிடத்தில் ஒரு துண்டத்தை நடவும்.

## இடைவெளி

30 ச.மீ × 30 ச.மீ

## நீர்ப்பாசனம்

இதற்குத் தேங்கியிருக்கும் நீர் அவசியமாகும். எனினும் தொடர்ச்சியாக நீர் தேங்கி இருக்குமாயின் வளர்ச்சி குன்றும். எனவே, 2-3 வாரங்களுக்கொரு தடவை தேங்கி நிற்கும் நீரை வெளியேற்றி மீண்டும் நீரூற்றவும்.

## பசளை இடல்

கொஹிலவிற்கு இயலுமான வரை கோழி எரு, சாணம், கூட்டெரு, இலை குழைகள் போன்ற சேதனப் பசளைகளை இடல் வேண்டும். போதியளவு சேதனப் பசளைகள் கிடைக்காவிடில் இரசாயனப் பசளைகளை இடல் வேண்டும்.

## இரசாயனப் பசளைகள்

இதனைத் தோட்டத்தில் நீண்ட காலத்திற்கு வைத்திருக்கலாம். எனவே, கூடிய தடவை களுக்குப் பசளை இடல் வேண்டும்.

## அடிக்கட்டுப் பசளை

100 சதுர மீற்றர் பரப்பிற்கு பின்வரும் பசளைகளை நடுவதற்கு முன் இட்டு மண்ணுடன் நன்கு கலந்து விடவும்.

| | |
|---|---|
| யூறியா | - 1 கி.கி |
| செறிந்த சுப்பர் பொசுபேற்று | - 1.5 கி.கி |
| மியூறியேற்றுப் பொட்டாசு | - 1 கி.கி |

## மேற்கட்டுப் பசளை

மேற்கட்டுப்பசளை பின்வரும் சந்தர்ப்பங்களில் இடல் வேண்டும்.

100 சதுர மீற்றர் பரப்பிற்கு

1. நட்டு 4 வாரங்களின் பின் 1 கிலோ கிராம் யூறியா
2. ஒவ்வொரு 6 மாதங்களுக்கொரு தடவையும் 1 கிலோ கிராம் செறிந்த சுப்பர் பொசுபேற்று.
3. ஒவ்வொரு தடவை அறுவடை செய்த பின்னரும்
   யூறியா 1/2 கிலோ கிராம்
   மியூறியேற்றுப் பொட்டாசு 1/2 கிலோ கிராம்

## கங்குன் (*Ipomea aquatica*)

கங்குன் பிரபல்யமான கீரையாகும். கொழும்பை அண்மித்துள்ள நீர் தேங்கி நிற்கும் இடங்களில் வர்த்தக நோக்கில் பரவலாகச் செய்கை பண்ணப்படுகின்றது.

வீட்டுத் தோட்டங்களிலும், ஈரலிப்பான இடங்களிலும் செய்கைபண்ணலாம். நீர் தேங்கி நிற்கும் பள்ளமான இடங்களிலும், நீர்ப்பாசனம் செய்ய முடியுமாயின் மேட்டு நிலங்களில் இதனைப் பயிரிடலாம்.

வளர்ச்சியைப் பொறுத்து இரண்டாக வகைப்படுத்தலாம்.

1. கொடி

தண்டு ஊதா சேர்ந்த பச்சை நிறமாகும். படரும். இதன் பூ ஊதா நிறமானது.

2. செடி

தண்டு பச்சை நிறமானது. பூ வெண்ணிறமானது. செடியாக வளரும்.

### காலநிலைத் தேவை

குளிரான மலைநாட்டுப் பகுதிகளை விட வேறு எந்தப் பகுதியிலும் போதியளவு நீர் கிடைக்கும் போது பயிரிடலாம். நீர் தேவைப்படுவதால் பரவலாக ஈர வலயத்திலேயே செய்கை பண்ணப்படுகின்றது. சதுப்பு நிலத்திலும், நீர் கிடைக்குமாயின் மேட்டு நிலங்களிலும் செய்கைபண்ணலாம். மேட்டு நிலங்களில் கிரமமாக நீர்ப்பாசனம் செய்யாவிடில் விரைவில் பூக்கும். உலர் வலயத்தில் சதுப்பு நிலங்களிலும், நீரோடைகளுக்கு அண்மையிலும் கங்குன் இயற்கையாகவே வளரும். மண்ணின் பீ.எச் மட்டம் 6.00-7.00 வரை உகந்தது.

### நடுகைப்பொருட்கள்

ஆரோக்கியமான தோட்டத்திலிருந்து நடுகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். 3-4 கணுக்களைக் கொண்ட 20-30 ச.மீ நீளமான தண்டுத் துண்டங்கள் நடுகை செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. நட முன் இலைகளை அகற்ற வேண்டும்.

### நடுகைக் காலம்

நீர் உள்ள பள்ளமான இடங்களில் எக்காலத்திலும் நடலாம். மேட்டு நிலங்களில் மழையுடன் நடுகை செய்ய வேண்டும்.

### நிலத்தைப் பண்படுத்தலும், நடுகை செய்தலும்

நடுகை செய்யப்படும் இடத்திற்கேற்ப நிலத்தைப் பண்படுத்த வேண்டும்.

#### பள்ளமான இடங்களில் செய்கைபண்ணல்

மண்ணைப் புரட்டி, நீரைத் தேக்கி வைத்திருந்து களைகள் அழுகுவதற்கு இடமளிக்கவும், தேவையான போது நீரை வடித்து விடுவதற்கு வசதியாகக் கான்களை அமைக்க வேண்டும். மண்ணைத் தூர்வையாக்கி, நிலத்தை மட்டப்படுத்தி 30 சதம மீற்றர் இடைவெளியில் நடுகை செய்ய வேண்டும். எழுந்தமானமாகவும், தண்டுகளை நடுகை செய்யலாம்.

நீரை வெளியேற்ற முடியாத சதுப்பு நிலங்களில் நிலத்தைப் பண்படுத்துவதற்குப் பதிலாக நுனியை அகற்றிய தண்டுகளை நீரில் வீசி நட முடியும்.

#### மேட்டு .நிலச்செய்கை

மண்ணைப் புரட்டி, களைகளை அகற்றிய பின் தாழ்ந்த பாத்திகளை அமைக்கவும். பாத்திகள் நன்கு ஈரமாகும் வரை நீரூற்றி 30 × 30 ச.மீ இடைவெளியில் கங்குன் தண்டுகளை நடவும்.

### களைக் கட்டுப்பாடு

கங்குன் கீரையுடன் வளரும் களைகளை காலத்திற்குக் காலம் பிடுங்கி அழித்து, தோட்டத்தைச் சுத்தமாக வைத்திருக்கவும்.

### பசளை இடல்

நன்கு உக்கிய சாணம், கோழியெரு, கூட்டெரு போன்ற சேதனப்பசளைகளில் 1 மெ. தொன்னை 1000 சதுர மீற்றர் (1/4 ஏக்கர்) பரப்பிற்கு நடுவதற்கு முன் இட்டு மண்ணுடன் கலந்து விடவும். வட்டப்புழுக்களின் தாக்கம் குறைவாக இருப்பதாலும், களைகள் பரவாதபடியாலும், விவசாயிகள் கோழியெருவைப் பரவலாக இடுகின்றனர்.

### இரசாயனப் பசளைகளை இடல்

### அடிக்கட்டுப் பசளைகளை இடல்

கங்குனை நடுவதற்கு முன் அடிக்கட்டுப் பசளைகளை மண்ணுடன் கலந்து விடல் வேண்டும். 1000 சதுர மீற்றர் பரப்பிற்கு இட வேண்டிய பசளைகளின் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| யூறியா | - | 9.00 கி.கி |
| செறிந்த சுப்பர் பொசுபேற்று | - | 13.5 கி.கி |
| மியூறியேற்றுப் பொட்டாசு | - | 10.0 கி.கி |

**மேற்கட்டுப் பசளை இடல் (1000 சதுர மீற்றர் பரப்பிற்கு)**

1. நட்டு 4 வாரங்களின் பின் 9 கிலோ கிராம் யூறியாவை இடவும்.
2. ஒவ்வொரு தடவை அறுவடை செய்த பின்னரும் 4.5 கிலோ கிராம் யூறியா, 1.5 கிலோ கிராம் மியூறியேற்றுப் பொட்டாசு என்பனவற்றை இடவும்.
3. ஒவ்வொரு 6 மாதங்களுக்கொரு தடவையும் 6.5 கிலோ கிராம் செறிந்த சுப்பர் பொசுபேற்றை இடவும்.

### நோய்களைக் கட்டுப்படுத்தல்

### 1. கபிலப் புள்ளி

சேர்க்கஸ்போரா என்னும் பங்கசுவினால் இலைகளில் கபில நிறமான புள்ளிகள் உருவாகும். பின் இலைகள் மஞ்சள் நிறமாகி இறக்கும். பொட்டாசியப் பசளையை இடல், பாதிக்கப்பட்ட தாவரத்தைப் பிடுங்கி அழித்தல் என்பனவற்றின் மூலம் நோயைக் குறிப்பிடத்தக்களவு கட்டுப்படுத்த முடியும்.

### அறுவடை

மேட்டு நிலங்களில் செய்கைபண்ணும் போது, நட்டு 30 நாட்களில் அறுவடை செய்யலாம். இதன் பின் 20-25 நாட்களுக்கொரு தடவை அறுவடை செய்ய முடியும்.

1000 சதுர மீற்றர் (1/4 ஏக்கர்) பரப்பிலிருந்து ஒரு தடவையில் 2000 கிலோ கிராம் கீரையை அறுவடை செய்யலாம்.

## பசளி (*Spinacia oleracea*)

பசளியும் பிரபல்யமான கீரையாகும். சந்தைகளில் இதற்குக் குறிப்பிடத்தக்களவு கிராக்கி உள்ளது. ஆனால் வர்த்தக ரீதியில் குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரமே செய்கைபண்ணப் படுகின்றது. வீட்டுத்தோட்டங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. வீட்டுத்தோட்டமொன்றில் 2-5 செடிகளை நடுவதன் மூலம் குடும்பத்திற்குத் தேவையான கீரையைப் பெறமுடியும். அதிகளவு குளிரான பிரதேசங்களைத் தவிர இலங்கையின் எந்தப் பாகத்திலும் பயிரிடலாம். இதன் வளர்ச்சியைப் பொறுத்து, கொடி, செடி என இரண்டாக வகைப்படுத்தலாம். பெரிய இலைகளைக் கொண்ட கொடிகளே வர்த்தக நோக்கில் பயிரிடப்படுகின்றது. சிவப்பு நிறமான பசளி உணவிற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், இது பிரபல்யமானதல்ல.

பசளியில் அதிகளவான இரும்புச்சத்து இருப்பதாகப் பரவலாகக் கருதப்பட்ட போதிலும், இதைவிட ஆறு மடங்கு அதிகமாக வல்லாரையில் உள்ளது (அட்டவணை 2). சாறனை, பொன்னாங் காணி, முளைக்கீரை என்பனவற்றிலும் பசளியை விட அதிகளவான இரும்புச்சத்து உள்ளது. பசளியில் அடங்கியுள்ள ஒக்சாலிக் அமிலம் உடலில் கல்சியத்தின் அனுசேபத்தைத் தடுக்கும். எனவே, குருதியில் உள்ள கல்சியம் உடலில் உறிச்சப்படாது, சிறுநீரகம், போன்றவற்றில் படிந்து கல் உருவாகலாம். எனவே, பசளியை அடிக்கடி உணவிற் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

பெரிய இலைகளைக் கொண்ட யோத பசளி 40-50 நாட்கள் வரை செடியாக வளர்ந்து, பின்

படரத் தொடங்கும். எனவே, வர்த்தக நோக்கில் பயிரிடும் பெரும்பாலான விவசாயிகள் 40-45 நாட்களில் முழுச் செடியையும் பிடுங்கி விற்பனை செய்கின்றனர். எனவே, கொடியைப் படர விட வலை அவசியமில்லை. ஆனால் சிலர் வலைகளை அமைத்து அதில் கொடியைப் படர விடுகின்றனர். இதில் முதிர்ச்சி அடையாத தண்டுகளைக் கிரமமாக அறுவடை செய்யலாம். இம்முறையே பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. வீட்டுத் தோட்டங்களுக்கு இம்முறை உகந்தது.

## நடுகைப் பொருட்கள்

நடுவதற்கு விதைகள் பயன்படுத்தப்படுகின்றன. 10 சதுர மீற்றர் பரப்புள்ள பாத்தியொன்றிற்கு 10-15 விதைகள் தேவை. தண்டுத் துண்டங்களையும் நடலாம். ஆனால் இவை விரைவில் பூக்கும். எனவே, போதியளவு கீரைகளைப் பெற முடியாது.

## நிலத்தைப் பண்படுத்தல்

பசளியைப் பயிர் செய்ய நன்கு நீர் வடிந்து செல்லக்கூடிய இடம் அவசியமாகும். மண்ணைப் புரட்டி, மண் கட்டிகளை உடைத்துத் தூர்வையாக்க வேண்டும். நீர் வடிப்புக் குறைந்த இடங்களில் உயர் பாத்திகளை அமைப்பதன் மூலம் நீர் வடிப்பை விருத்தி செய்ய முடியும்.

## நடுகை செய்தல்

1. 40-50 நாட்களில் செடியாகவே அறுவடை செய்வதாயின் 15×15 சதம மீற்றர் இடைவெளியில் நடுகை செய்வது உகந்தது.
2. கொடியாகப் படர விடுவதாயின் 45×45 சதம மீற்றர் இடைவெளியில் ஒரு இடத்தில் இரு விதைகளை நடல் வேண்டும். 5-6 நாட்களில் விதைகள் முளைக்கும்.

## வலைகளை அமைத்தல்

நட்டு 4 வாரங்களாகியதும், தரை மட்டத்திலிருந்து 1-1 1/2 அடி உயரத்தில் இருக்கத்தக்கவாறு வலையை அமைக்க வேண்டும்.

## பசளை இடல்

சேதனப் பசளைகளையும், இரசாயனப் பசளைகளையும் இடல் வேண்டும்.

### சேதனப் பசளைகள்

பரவலாகக் கோழியெரு இடப்படுகின்றது. சாணம் சிறந்தது. ஆனால் இதன் மூலம் களைகள் பரவுவதால், வர்த்தக நோக்கில் பயிரிடும் போது சாணம் இடப்படுவதில்லை. வீட்டுத் தோட்டங்களில் சாணத்தை இடலாம். 10 சதுர மீற்றர் பரப்புள்ள பாத்தியொன்றிற்கு 25 கிலோ கோழியெரு இடப்படுகின்றது. நடுவதற்குச் சில தினங்களுக்கு முன் சேதனப் பசளைகளை இட்டு மண்ணுடன் கலந்து விடல் வேண்டும்.

### அடிக்கட்டுப் பசளைகளை இடல்

100 சதுர மீற்றர் பரப்பிற்கு

| | | | |
|---|---|---|---|
| யூறியா | - | 1 | கி.கி |
| செறிந்த சுப்பர் பொசுபேற்று | - | 1.5 | கி.கி |
| மியூறியேற்றுப் பொட்டாசு | - | 1 | கி.கி |

### மேற்கட்டுப் பசளை இடல்

நட்டு 3-4 வாரங்களின் பின் 1 கிலோ கிராம் யூறியாவை இடல் வேண்டும். இலையில் காணப்படும் யூறியா கழுவிச் செல்லத்தக்கவாறு நீரை விசிறல் வேண்டும்.

## நீர்ப்பாசனம்

3-4 நாட்களுக்கொரு தடவை நீரூற்றவும். வரட்சியான காலத்தில் அடிக்கடி நீரூற்றவும்.

## அறுவடை

இரண்டு விதமாக அறுவடை செய்யலாம்

1. 40-45 நாட்களின் பின் முற்றாகப் பிடுங்கி அறுவடை செய்யலாம்.
2. 40-45 நாட்களின் பின் நில மட்டத்திலிருந்து 15 சதம மீற்றர் உயரத்தில் வெட்டவும். இதன் பின் மீண்டும் வளரத் தொடங்கும். இவ்வாறு 6-8 தடவைகள் அறுவடை செய்யலாம். இளம் பூக்களையும் வறையாகத் தயாரிக்கலாம்.

## அகத்தி (*Sesbania Grandiflora*)

அவரைக் குடும்பத்தைச் சேர்ந்த பயிராகும். நீண்ட காலமாகவே உண்ணப்படும் கீரையாகும். சிறந்த மருத்துவ இயல்புகளைக் கொண்டுள்ளது. வாயில் வெடிப்புகள் ஏற்படல், அதிக உஷ்ணத்தினால் நாக்கில் கட்டிகள் தோன்றுதல், வயிறு உலர்தல் போன்றவற்றிற்கு உகந்தது. இதன் ஆயுர்வேத மருத்துவ இயல்புகள் பின்னால் தரப்பட்டுள்ளன. இலகுவில் செய்கைபண்ணக் கூடிய கீரையாகும். எவ்விதமான நச்சுப் பொருட்களும் விசிறப்படாத சிறந்த கீரையாகும். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மரத்தையாவது நடுவது மிகவும் உகந்தது. வெள்ளைப் பூ அகத்தி, சிவப்பு பூ அகத்தி என இரு வகையுண்டு. இவையிரண்டிலுமே பூ, இலை என்பனவற்றை உண்ண முடியும். வெள்ளைப் பூ வர்க்கம் மிகவும் பிரசித்தி பெற்றது.

### பொருத்தமான பிரதேசம்

பள்ளநாட்டிலும், மத்திய நாட்டின் ஈர வலயத்திலும் உலர் வலயத்திலும் அகத்தியை வெற்றிகரமாகச் செய்கை பண்ணலாம். சூடான காலநிலை அகத்திக்கு உகந்தது. குளிரான காலநிலை நிலவும் மலைநாட்டில் இதனை திருப்திகரமாகச் செய்கைபண்ண முடியாது.

### நடுகைப் பொருட்கள்

விதை மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. நன்கு முற்றி மஞ்சள் நிறமாகி உலர்ந்த பழங்களிலேயே விதைகளைப் பெற வேண்டும். ஆனால் உலர்ந்து நாட் சென்ற பழங்களில் விதை களைப் பெறக் கூடாது. இவ்விதைகளின் முளை திறன் குறைவாகவே இருக்கும். நீரில் நனைந்த பழங்களில் பெறப்பட்ட விதைகளும் நடுகைக்கு உகந்தவை அல்ல. விதைகளின் வாழ்தகவு விரை வில் இழக்கப்படுவதால், நடுகை செய்யும் போதே விதைகளைப் பழங்களிலிருந்து பிரித்தெடுக்க வேண்டும்.

### நாற்றுக்களை உற்பத்தி செய்தல்

விதைகளிலிருந்து நாற்றுக்களை உற்பத்தி செய்வதற்கு உயர் நாற்றுமேடைகள், பொலித்தீன், கடதாசிப் பைகள் அல்லது வேறு பாத்திரங்களைப் பயன்படுத்த முடியும். சில விதைகளை நட்டு, அவை முளைத்த பின் வீரியமாக வளரும் நாற்றை மாத்திரம் மீதமாக விட்டு ஏனையவற்றை பிடுங்கி அகற்றலாம். விதைகள் முளைக்கும் வரை தினந்தோறும் நீரூற்ற வேண்டும். இதன் பின் காலநிலைக்கு ஏற்ப இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கொரு தடவை நீரூற்ற முடியும். நாற்றுக்களைத் தோட்டத்தில் நட முன் அவற்றை வன்மைப்படுத்த வேண்டும். 15-20ச.மீ உயரமுடைய நாற்றுக்கள் நடுகை செய்வதற்கு உகந்தவை. பென்சில் அளவான தடிப்புடைய தண்டுகளில் பட்டைகளை அகற்றியபின் அதனைச் சுற்றிவர ஈரமாக்கப்பட்ட தென்னந் தும்புத் தூளைச் சுற்றிக் கட்டடியபின் (காற்றுப் பதியம்) 3-4 வார காலத்தில் அதனை மரத்திலிருந்து வெட்டி நடலாம்.

### நாற்றுக்களைத் தோட்டத்தில் நடல்

தோட்டத்தில் நடுவதற்காக நாற்றுக்களை வேர்கள் பாதிக்கப்படாதவாறு பிடுங்க வேண்டும். பைகளில் உள்ள நாற்றுக்கள் தோட்டத்தில் நடுவதற்கு மிகவும் உகந்தவை ஆகும். 45×45×45 ச.மீ அளவில் தயார் செய்யப்பட்ட குழிகளில் கூட்டெரு, சாணம் போன்ற சேதனப் பசளைகளுடன், மேல் மண்ணையும் கலந்து இட்டபின் அதில் நாற்றுக்களை நடவும். நாற்றுக் களை நட்டபின் சில நாட்களுக்கு நிழல் வழங்கவும். நட்டபின் பத்திரக் கலவை இடுவது அவசியமாகும். நடும் போது மண்ணை நன்கு அமுத்தி விடல் வேண்டும். வீட்டுத் தோட்டங்களில் நடும் போது, அடுத்த வீட்டிற்குப் பாதிப்பு ஏற்படாதவாறு, வேலியிலிருந்து 1-1 1/2 மீற்றர் தூரத்தில் நடல் வேண்டும். அகத்தி சூரிய வெளிச்சத்தை விரும்பும் மரமாகும். எனவே நிழலுள்ள இடங்களில் நடுவதால் எவ்வித பயனுமில்லை. அதிகளவில் காற்று வீசும் போது, காற்றால் பாதிக்கப்படாதவாறு ஆதாரமொன்றை ஊன்றி விடவும். குண்டசாலையிலுள்ள விவசாயக் கல்லூரி அலுவலர்களின் அனுபவத்தின் படி இதனை 2×2 மீற்றர் இடைவெளியில் நடல் வேண்டும்.

### அறுவடை செய்தல்

நட்டு 8 மாதங்களின் பின் இலைகளையும் ஒரு வருடத்தின் பின் பூக்களையும் விளைச்சலாகப்

பெற முடியும். இலைகள் மாத்திரம் அவசியமாயின் பூ அரும்புகள் தோன்றும் போதே அவற்றை அகற்றி விடல் வேண்டும். இதனால் இலைகள் அதிகளவில் உருவாகும். காலத்திற்குக் காலம் இவற்றைக் கத்தரிப்பதன் மூலம் கூடியளவு இலைகளைப் பெறமுடியும். சந்தைகளுக்கு அனுப்புவதாயின் காலை வேளையில் அறுவடை செய்வது உகந்ததாகும்.

## கத்தரித்தல்

அகத்தி பல்லாண்டுப் பயிராகும். எனவே இதனை மூன்று வருடங்களுக்கும் அதிக காலத்திற்குப் பராமரிக்க முடியும். இதனைக் கத்தரிக்காது வளர விடும்போது, சில வேளைகளில் 6 மீற்றர் உயரம் வரை வளரும். இவற்றிலிருந்து பூக்கள், இலைகளை அறுவடை செய்வது சிரமமானதாகும். உயரமாக வளரும் போது மரத்தின் ஆயுட் காலமும் குறையும். வீரியமும் குறைவாகவே இருக்கும். எனவே அகத்தியை அவசியம் கத்தரிக்க வேண்டும். கத்தரித்து, நீரூற்றும் போது அதிகளவான இலைகள் உருவாகும். மரம் ஒரு மீற்றர் உயரம் வரை வளர்ந்த பின் நுனி அரும்பை வெட்டி விடவும். இதனால் பக்கக் கிளைகள் உருவாகத் தொடங்கும். இதன் பின் பல திசைகளிலும் வளரக் கூடியவாறு 3-4 கிளைகளை மாத்திரம் மீதமாக விட்டு ஏனையவற்றைக் கத்தரிக்கவும். இப்பக்கக் கிளைகள் 1-1 1/2 மீற்றர் வரை வளர்ந்த பின் மீண்டும் அவற்றின் நுனியைக் கத்தரிக்கவும். இவ்விடங்களில் பூக்கள் உருவாக முன், இலைகளை அறுவடை செய்ய முடியும். அகத்தி மரத்தை 1 1/2 மீற்றர் உயரத்தில் பராமரிக்கத் தக்கவாறு சிலர் கத்தரிப்பர். இதனால் இலகுவில் அறுவடை செய்யலாம். அறுவடை செய்தபின் சேதனப் பசளைகளை இடுவது உகந்தது. இவற்றுடன் சிறிதளவு யூறியாவைக் கலந்து விடுவதன் மூலம், புதிய அரும்புகள் விரைவாகத் தோன்றும். கத்தரிக்கும் போது அல்லது அறுவடை செய்யும் போது எல்லாக் கிளையையும் (இலைகளுடன்) அகற்றுவது நல்லதல்ல.

## பசளை இடல்

தோட்டத்தில் நடும் போதும், 5-6 மாதங்களுக் கொரு தடவையும் இயலுமானவரை சாணம், கூட்டெரு, கோழி எரு போன்ற சேதனப்பசளை களை இடுவது மிகவும் உகந்தது. அகத்தி வேரிலுள்ள முடிச்சுகளில் பக்றீரியாக்கள் காணப்படும். இப்பக்றீரியாக்களால் பதிக்கப்படும் நைதரசனை அகத்தி மரம் பயன்படுத்தும். குறைந்த வெப்பநிலையுள்ள பிரதேசங்களில் சேதனப் பசளைகளை இடுவதன் மூலம் அதிக விளைச்ச லைப் பெறமுடியும். இவற்றைத் தவிர கரி, சாம்பல் போன்றவற்றையும் இடலாம். அகத்திக்கு எவ்விதமான இரசாயனப் பசளைகளும் சிபாரிசு செய்யப்படவில்லை. நாற்றுப் பருவத்தில் வளர்ச்சி குன்றிக் காணப்படுமாயின் சிறிதளவு யூறியாவை இடுவதன் மூலம் வளர்ச்சியை விரைவு படுத்தலாம்.

## நோய், பீடைக் கட்டுப்பாடு

எவ்விதமான ஆபத்தான பீடைகளும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. ஆனால் நாற்றுப் பருவத்தில் நத்தை, இலையரி புழு என்பன தாக்க லாம். இவற்றை கையாற் பிடித்து அழிக்கலாம் அல்லது சாம்பலைத் தூவலாம். உலர் காலத்தில் தூள் பூஞ்சணநோய் ஏற்படலாம். இதனால் பாதிக்கப்பட்ட இலைகளை உண்ண முடியாது. எனவே இவற்றைக் கத்தரித்து அகற்ற வேண்டும். நீர் தேங்கி நிற்குமாயின் வளர்ச்சி தடைப்படும். இலைகள் சுருண்டு மரம் இறக்கும். காறையழுகலும் ஏற்படலாம்.

## உணவிற்குப் பயன்படுத்தல்

நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் என்பனவற்றில் பொரித்த அகத்தி இலை, உணவிற்குச் சுவையூட்டும் ஒரு பொரியலாகும். இளம் இலைகளிலிருந்து சுவையான கிச்சடியைத் தயார் செய்யலாம். இலையைப் பால் சொதி தயாரிக்கப் பயன்படுத்தலாம். வறை தயாரிக்கலாம்.

அகத்திப் பூவை எண்ணெயிற் பொரித்து, உண்ண முடியும். முட்டையைப் பொரிக்கும் போது அகத்திப் பூவைச் சேர்ப்பதன் மூலம் அவற்றிற்குச் சுவையூட்ட முடியும். அகத்திப் பூவிதழ்களைக் கோதுமை மாக் கரைசலில் தோய்த்தெடுத்து அதனைப் பொரித்தும் உண்ணலாம்.

கையால் உடைக்கக் கூடியளவு முதிர்ச்சி அடைந்த காய்களைச் சுடுநீரில் அவித்து, ஏனைய மரக்கறிகளைப் போன்று சமைக்க முடியும்

## ஆயுர்வேத மருத்துவ இயல்புகள்

### பொன்னாங்காணி

கண்ணின் பார்வைத் திறனை விருத்தி செய்யும். கண்ணில் வெள்ளை விழுதல், கண் பார்வைக் குறைபாடு என்பனவற்றைச் சுகப்படுத்த உதவும். நார்த்தன்மை உள்ளதால் மலச்சிக்கலைக் கட்டுப்படுத்தும். குருதி சுத்தமாகும். குருதி உருவாக உதவும். பசியை உண்டாக்கும். ஆஸ்துமா நோயாளிகளுக்கு ஏற்றதல்ல.

### வல்லாரை

மூளையின் கிரகிக்கும் திறன் அதிகரிக்கும். குழந்தைப் பருவத்திலிருந்தே வல்லாரை இலைக் கஞ்சியை வழங்கி வந்தால் கல்வி பயில உதவும். நித்திரையில்லாத முதியோருக்கு நித்திரை செய்ய உதவும். உடலின் நிறம் விருத்தியடையும். இளமையுடன் திகழ முடியும். பீனிசம், வலிப்பு, மூளைக்கோளாறு போன்ற நோய்களுக்கு மருந்தையும், உணவையும் தயாரிக்கலாம். சமிபாட்டுத் தொகுதியிலுள்ள புழுக்களைக் கட்டுப்படுத்த உதவும். பச்சை வல்லாரையைப் பிழிந்து சாற்றை அருந்துவது நல்லதல்ல. அதிகளவில் குடித்தால் போதை ஏற்படும். அதிகளவில் இரும்புச்சத்து உள்ளது. ஆயுர்வேத வைத்தியத்தில் சிரேஷ்ட தாவரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் தங்கம் உள்ளதாக சிலர் நம்புகின்றனர்.

### கங்குன்

உணவு சமிபாடு அடைய உதவும். நார் உள்ளதால் மலச்சிக்கலைத் தடுக்கும். கொழுக்கிப் புழுவைத் தடுக்கும். அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

### அகத்தி

கண்ணிற்கும், பீனிச நோய்களுக்கும் ஏற்றது வயிற்றில் புழுக்களை இல்லாதொழிக்கும். உடலில் உள்ள நச்சுக்களை அகற்றும். மலம் இலகுவாகக் கழியும். மயிர் வளர்ச்சிக்கு உதவும். புற்றுநோய் ஏற்படுவதைத் தவிர்ப்பதோடு, புற்றுநோயைக் கட்டுப்படுத்தவும் உதவும். சமிபாடு அடைவது கடினமாகும். எண்ணெய் விட்டுச் சமைக்கும் போது இதனைத் தவிர்க்க முடியும். சூப் தயாரிக்கும் போது இதனைச் சேர்த்துக் கொள்ள முடியும். நண்டு, இறால், கணவாய் என்பனவற்றைச் சமைக்கும் போது அகத்தியைச் சேர்த்துக் கொள்வதனால் அவற்றிலுள்ள விசத்தன்மையை இல்லாதொழிக்கலாம். இரும்பு அடங்கியுள்ளது. முருங்கையிலையை ஒத்த இயல்புகளைக் கொண்டது.

### முளைக் கீரை

நோய்களைத் தாங்கும் சக்தியை வழங்கும்.இரத்தப் பித்த நோய்க்கு உகந்தது. குருதி உண்டாவதற்கும், வளர்ச்சிக்கும் உதவும். மலச்சிக்கலைப் போக்கும். வியர்வையிலுள்ள துர்நாற்றத்தைப் போக்கும். இரும்பு அடங்கியுள்ளது.

### சாறணை

சிறுநீர் வெளியேற உதவும். சிறு நீரகத்தைச் சுத்தம் செய்வதுடன், கல் உண்டாவதையும் தடுக்கும். வியர்வையைக் குறைக்கும். வியர்வையின் துர்நாற்றதைப் போக்கும். மலச்சிக்கலைப் போக்கும். சமிபாட்டை இலகுவாக்கும். வீங்குவதைத் தடுக்கும். அமிலப் பித்த நோய்களுக்கு ஏற்றது. உடல் வீங்கும் சமயத்தில் நலம் பெற உதவும்.

### பசளி

மலச்சிக்கலைப் போக்கும் உடலைக் குளிர்ப் படுத்தும். சளியை உண்டாக்கும். பித்தத்தைச் சமப்படுத்தும். ஆஸ்த்மா நோய்க்கு ஏற்றதல்ல. சூப் தயாரிக்கும் போது பயன்படுத்த முடியும். அளவிற்கதிகமாக உணவில் சேர்க்கக் கூடாது. சில குஷ்டரோகத்திற்கு, இலையை அரைத்துப் பசையாக பூசுவதற்கு உகந்தது. அமில பித்த நோக்கு ஏற்றதல்ல. மூல நோய்க்கு உகந்தது. மலச்சிக்கலைப் போக்கும்.

### கொஹில

நார்ப்பொருள் உள்ளதால் வயிற்றில் உண்டாகும். புண், புற்றுநோய் என்பன ஏற்படுவதைத் தடுக்கும். மூல நோய்க்கு உகந்தது. மலச்சிக்கலைச் சுகப்படுத்தும்.

### நீர் முள்ளி

நீர் முள்ளி சிறுநீர் வெளியேற உதவும். சிறு நீரகத்தைச் சுத்தம் செய்யும். சிறுநீருடன் இரத்தம் கழியும்போது பயன்படுத்தலாம். மூட்டு வீங்குவதைத் தடுக்கும். மூட்டுவலி நோய்க்கும் உகந்தது.

### முடக்கொத்தான்

இரத்த அழுத்தத்தைக் குறைக்கும். ஆண் தன்மையை அதிகரிக்கும். நித்திரை கொள்ள உதவும். போசணைச் சத்தும் அதிகமானதாகும்.

### குறிஞ்சா

குருதியைச் சுத்தப்படுத்தும். கொலோஸ்ரரோல் உற்பத்தி செய்யப்படும் அளவைக் குறைப்பதாகக் கருதப்படுகின்றது. நாடாப்புழுவை இல்லா தொழிக்கும். பசியை ஏற்படுத்தும். குஷ்ட ரோகத்தைத் தவிர்க்கும். நோய்கள் குணமடையும் போது இதனை உணவிற் சேர்த்துக் கொள்வது உகந்தது. நோயைச் சுகப்படுத்தும். ஒவ்வொரு நாளும் சோற்றுடன் ஒரு இலையைப் பச்சையாக உண்பது சிறந்த பயனைத் தரும்.

### பூசணி இலை

நார்த்தன்மை உள்ளதால், மலச் சிக்கலைப் போக்கும். பித்தம் கண் எரிதல் என்பனவற்றைக் குறைக்கும்.

### பெதி தோர

குருதி சுத்தமாகும். பூச்சிகளை இல்லா தொழிப்பதற்கு உகந்தது.

### குப்பைமேனி

மூலிகையாகப் பயன்பட்டாலும், உணவில் சிறிதளவே சேர்க்கப்படுகின்றது. விசமடைய இடமுண்டு.

### வாத பங்க (வாத நீக்கி)

இடுப்பு வலி, வாத நோய் என்பனவற்றை இல்லாதொழிக்கும்.

### கத்தரித் துளிர்

சளியைப் போக்கும். இருமலுக்கு ஏற்றது. கொடி சுண்டங் கத்தரித்துளிர் நுரையீரல் நோய்களுக்கு ஏற்றது.

### கறிவேப்பிலை

உயர் இரத்த அழுத்தத்தை நீக்கும். கொலொஸ்ர ரோல் உருவாகுவதைத் தடுக்கும். கூடியளவு போசணைச்சத்துக் கொண்டது. உணவு சமிபாடு அடைய உதவும். உணவிற்குச் சுவையூட்டும். உண்ணும் போது கறிவேப்பிலையைப் பலர் ஒதுக்கி விடுவதால், சிறிய துண்டுகளாக்கிச் சமைத்தால் இதனைத் தவிர்க்க முடியும். உணவின் சுவை, மணம் என்பனவற்றை அதிகரிக் கும். பாம்பின் விஷம் உடலிற் சேர்ந்தால் இதன் பூ, வேர், இலை, பட்டை, காம்பு, என்பனவற்றை இடித்துச் சாற்றைப் பிழிந்து, ஒரு கோப்பை சாற்றிற்கு 2 மேசைக் கரண்டி நெய்யைச் சேர்த்து அருந்தினால் விசத்தைக் குறைக்க முடியும். முதலுதவிச் சிகிச்சைக்கு உகந்தது. அஜீரணம் ஏற்படும் போது கறிவேப்பிலைக் காம்பினை அவித்து அருந்தினால் குணமடையும்.

(மஹரகமை, நாவின்ன நண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி உபாலி பிலபிட்டிய அவர்களிடம் மருத்துவ இயல்புகள் தொடர்பாகக் கேட்டறியப்பட்ட தகவல்கள்).

**விவசாயத் திணைக்களம்**
**பேராதனை**
**விவசாய, காணி அமைச்சு**
**1999**

விவசாயத் திணைக்கள அச்சகம், பேராதனை